

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தை

ஜனவரி — 1978





ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர், சென்னை - 600 004

70 காசு

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் 83-2

தொகுதி—58	ஜனவரி 1978	இதழ்—1

பொருளடக்கம்

பக்கம்

சந்தா எண் 1001 முதல் 1535 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை முடிவடைகிறது. அன்பர்கள் சந்தாவை உடனடியாகச் செலுத்தி புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.

எழுத்தாளர்களுக்கு

நமது பத்திரிகைக்கு ஏற்புடைய கதை, கட்டுரை, தகவல்கள் முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

மக்களுக்குப் பயன்படுவதாகவும், சுருக்கமாகவும், கருத்தாழம் கொண்டதாகவும், எழுத்தோவியங்கள் அமைவது முற்றிலும் அவசியம், காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், வரிக்கு வரி நிறைய இடம் விட்டு எளிய தமிழ் நடையில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

பத்திரிகையில் வெளியிடப்படுவதாக இருந்தால், அனுப்பியவருக்கு ஒரு வார காலத்திற்குள்ளாக ஆசிரியர் சார்பாகப் பதில் கிடைத்துவிடும். அவ்விதம் பதில் பெறாத அன்பர்கள், போதிய தபால் தலைகளை அனுப்பிவைத்துத் தமது படைப்புக்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன்இல்லை
— திருமூலர்

தொகுதி 58 | பிங்கள ௵ தை ௴ | இதழ் 1



श्रीकण्ठतनय श्रीश श्रीकर श्रीदलार्चित ।
श्रीविनायक सर्वेश श्रियं वासय मे कुले ।।

— श्री महागणबदि स्तोत्रम्

ஸ்ரீகண்ட தநய ஸ்ரீச ஸ்ரீகர ஸ்ரீதளார்ச்சித |
ஸ்ரீவிநாயக ஸர்வேச ஸ்ரீயம் வாஸய மே குலே ||

—ஸ்ரீ மகாகணபதி ஸ்தோத்திரம்

திருநீலகண்டரின் புதல்வரே! லட்சுமிநாதனே! செல்வத்தை அளிப்பவரே! வில்வ இதழ்களால் பூஜிக்கப்பட்டவரே! எல்லோருக்கும் தலைவரே! விநாயகக் கடவுளே! என்னுடைய வம்சத்தில் திருமகள் வாழும்படி செய்வீராக.

பொலிக! பொலிக! பொலிக! போயிற்று வல்லுயிர்ச் சாபம்!
நலியும் நரகமும் நைந்த! நமனுக்கு இங்கு யாதொன்றும் இல்லை!
கலியும் கெடும்! கண்டுகொள்மின்! கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்,
மலியப் புகுந்து இசைபாடி ஆடி உழிதரக் கண்டோம்!

—நம்மாழ்வார்



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், வித்யாசாகரை தாமே நேரில் சென்று சந்தித்தார். அந்த சந்திப்பின்போது நிகழ்ந்த உரையாடலின் ஒரு பகுதி இந்த இதழில் இடம் பெறுகிறது.

பண்டிதர் ஈசுவரசந்திரர் வங்காளத்தில் புகழ் வாய்ந்த ஒரு பேரறிஞராக விளங்கினர். அவருடைய பரந்த புலமைக்காக **'வித்யாசாகர்'** (கல்விக் கடல்) என்னும் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. அவர் தமது வருமானத்தில் பெரும் பகுதியை விதவைகளுக்கும், அனுதைகளுக்கும், ஆதரவற்ற ஏழை எளியவர்களுக்கும் செலவிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

வித்யாசாகரின் வள்ளன்மைக்காகவும் கருணை உள்ளத்துக்காகவும், மக்கள் அவர்மீது பெரிதும் மதிப்புக் கொண்டிருந்தனர்.

வித்யாசாகரைப் பற்றி ஸ்ரீராமகிருஷ்ணர் தம்முடைய சிறிய வயது முதற்கொண்டே கேள்விப்பட்டிருந்தார். அவரை நேரில்பார்க்க வேண்டும் என்ற ஆவலும் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு நீண்ட காலமாக இருந்து வந்தது.

1862-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் நாள், வித்யாசாகரைப் பார்ப்பதற்காக ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு குதிரை வண்டியில் புறப்பட்டார். பவநாத், ம—, ஹஸ்ரா ஆகியவர்களும் குருதேவருடன் சென்றுர்கள். போகும் வழியில் ஸ்ரீராமகிருஷ்ணரின் பார்வை தற்செயலாக ஒரு மனிதனின் மீது பதிந்தது. அந்த மனிதன், தான் அணிந்திருந்த கால்சட்டையின் அழகை ரசித்தபடி இருந்தான். அவனைக் கருணையே வடிவாகிய ஸ்ரீகுருதேவர் பார்த்தாரோ இல்லையோ, உடனே அவர் ஜகன்மாதாவாகிய தேவியிடம், ''தாயே, இந்த மனிதனுக்கு வாழ்க்கையில் போதுமான அளவுக்கு இன்பம் கிடைக்கவில்லை. கிருபைகூர்ந்து அவனுக்கு வாழ்க்கையில் ஒரு சிறிது இன்பம் கிடைக்கச் செய்வாயாக'' என்று இதயம் நெகிழப் பிரார்த்தித்துக் கொண்டார்.

குருதேவர் சென்ற வண்டி வித்யாசாகரின் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது அவர், ''தேவி, நான் ஒரு பண்டிதரைப் பார்ப்பதற்காகப் போகிறேன். ஆனல், நானே ஒரு சிறிதும் கல்வியறிவு இல்லாதவன் என்பது உனக்குத் தெரியும்'' என்று தனக்குத் தானே பலமுறை சொல்லிக் கொண்டார். அவர் தெய்வீகப் பரவச நிலைக்கு ஆட்பட்டார். ம— ஸ்ரீராமகிருஷ்ணரின் மனநிலையைக் கவனிக்காமல், ராஜாராம்மோகன் ராய் வாழ்ந்து வந்த மாளிகையைச் சுட்டிக்காட்டினுர். ஸ்ரீராமகிருஷ்ணர், ''இப்போது நான் இவைகளைக் கவனிக்க மாட்டேன்'' என்று சொன்னுர். அவருடைய மனம் தெய்வீகப் பரவசத்தில் அமிழ்ந்து கொண்டிருந்தது.

ஸ்ரீராமகிருஷ்ணர் சென்ற வண்டி வித்யாசாகரின் வீட்டின் முன்னல் நின்றது. ம— தாங்கிப் பிடிக்க குருதேவர் வண்டியிலிருந்து கீழே இறங்கினர்.

குருதேவர் வீட்டுக்குள் நுழையும் சமயத்தில், தமது சட்டையின் பொத்தான்களை ம—விடம் சுட்டிக்காட்டி, ''என்னுடைய மேல் சட்டையில் பொத்தான்கள் மாட்டப்படவில்லையே. அதனுல் வித்யாசாகருக்கு மன வருத்தம் ஏற்படுமா?'' என்று ஒரு குழந்தையைப் போல கேட்டார்.

ம— அதற்குப் பதிலாக, ''அதைப்பற்றி கவலைகொள்ள வேண்டாம். தங்களைப் பற்றிய

எதுவும் அவருக்கு மன வருத்தத்தை உண்டு பண்ணுது'' என்று சொன்னர். இந்தப் பதிலைக் கேட்ட குருதேவர் ஒரு குழந்தையைப் போல ஒப்புக்கொண்டார்.

குருதேவரும் அவருடன் சென்ற பக்தர்களும் ஓர் அறைக்குள் நுழைந்தார்கள். அங்கே ஒரு மேஜையின் முன்னல் உட்கார்ந்திருந்த வித்யாசாகர், முகமலர்ச்சியுடன் ஸ்ரீகுருதேவரை வரவேற்பதற்காக மனமுவந்து எழுந்தார்.

வித்யாசாகருக்கு ஸ்ரீராமகிருஷ்ணரை ம—அறிமுகம் செய்து வைத்தார். நீண்டகாலம் பழகிய ஒருவரைப் பார்ப்பது போல குருதேவர், வித்யாசாகரை உற்று நோக்கினர். அப்போது அவர் தெய்வீகப் பரவசத்தில் இருந்தார். அதே நிலையில் சில நிமிடங்கள் வரையிலும் நின்றுகொண்டே இருந்தார்.

பரவச நிலையைக் கட்டுப்படுத்தித் தமது மனதை சாதாரண நிலைக்குத் திருப்புவதற்காக குருதேவர் இடையிடையே, ''நான் சிறிது தண்ணீர் குடிப்பேன்'' என்று சொன்னர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இன்னும் தெய்வீகப் பரவசத்தில் இருந்தபடியே ஒரு பெஞ்சில் உட்கார்ந்தார்.

பதினேழு பதினெட்டு வயதுள்ள இளைஞன் ஒருவன், தன்னுடைய கல்விக்காக வித்யாசாகரிடம் பொருளுதவி பெற வந்திருந்தான். அவனும் ஸ்ரீராமகிருஷ்ணர் அமர்ந்த அதே பெஞ்சில் உட்கார்ந்திருந்தான். குருதேவர் அந்த இளைஞனைப் பார்த்ததும் மனம் அகமுகப்பட்ட நிலையில் இருந்தபடியே, "தேவீ, இந்த இளைஞன் உலகின் மீது மிகவும் பற்று கொண்டிருக்கிறன். அவன் உன்னுடைய அவித்யா (அறியாமை) உலகிற்கு உரியவன்'' என்று சொல்லிக் கொண்டே இளைஞனைவிட்டு சற்று தொலைவில் நகர்ந்து உட்கார்ந்தார்.

வித்யாசாகர் ஒருவரிடம் தண்ணீர் கொண்டு வரும்படி சொன்னர்; அவர் இனிப்புப் பண்டங்களை குருதேவர் விரும்புவாரா என்று ம—விடம் கேட்டார். அதற்கு ம—தடை ஒன்றும் சொல்லவில்லை. உடனே வித்யாசாகர், தாமே ஆவலுடன் உள்ளே இருந்த ஓர் அறைக்குள் சென்று, இனிப்புப் பண்டங்களைக் கொண்டு வந்து ஸ்ரீராமகிருஷ்ணரின் முன்பு வைத்தார்.

குருதேவரும் அவருடன் வந்த பக்தர்களும் தின்பண்டங்களை உண்டனர். பிறகு தம்முன்னல் இருந்த ஒரு பையனைக் குறித்து ஸ்ரீராமகிருஷ்ணர் வித்யாசாகரிடம் சொன்னர்: ''இவன் ஒரு நல்ல பையன். பல்கு நதியைப் போல, பல நல்ல இயல்புகள் இவனிடம் தென்படுகின்றன. பல்கு நதியின் மேல் பரப்பில் மணல் மூடி இருக்கும். ஆனல் ஒரு சிறிது தோண்டினல், நீர் கீழே ஓடிக்கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.''

பிறகு, குருதேவர் புன்சிரிப்போடு வித்யாசாகரிடம் பேசத் தொடங்கினர்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: ''ஆ! இன்று நான் கடைசியாக 'சாகரம்' (கடல்; வித்யாசாகர்)வந்து சேர்ந்தேன். இதுவரையிலும் கால்வாய்களையும், ஓடைகளையும், மிஞ்சினல் ஆறுகளையுமே நான் பார்த்திருக்கிறேன். ஆனல் இன்றைய தினம் 'சாகர'த்துக்கு, கடலுக்கு எதிரே இருக்கிறேன்.''

குருதேவர் வேடிக்கையாகச் சொன்னதைக் கேட்டு அருகில் இருந்தவர்கள் சிரித்தனர்.

வித்யாசாகர்: (புன்சிரிப்போடு) "அப்படியானல், அந்தக் கடலிலிருந்து சிறிது உப்பு நீரைப் பெற்றுக் கொள்ளுங்கள்.'' (சிரிப்பு)

ஸ்ரீராமகிருஷ்ணர்: ''இல்லை, இல்லை; நீங்கள் அப்படிப்பட்ட உப்புக் கடல் இல்லை. நீங்கள் அவித்தை (அறியாமை)க் கடல் அல்லவே, நீங்கள் வித்தைக் (ஞானம்) கடல். நீங்கள் புராணங்களில் சொல்லப்பட்டுள்ள பாற்கடலைப் போன்றவர்.'' (அனைவரும் சிரித்தனர்)

வித்யாசாகர்: ''சரி, தேவரீர் விரும்பியபடி சொல்லலாம்.''

ஸ்ரீராமகிருஷ்ணர்: ''நீங்கள் செய்து வரும் செயல்கள் சத்துவ குணத்திற்குட்பட்ட ரஜோ குணத்திலிருந்து உதிக்கின்றன. தயை, சத்துவ குணத்திலிருந்தும் எழுகிறது. மற்றவர்களின் நன்மையின் பொருட்டுச் செய்யப்படும் கர்மம் ரஜோகுணத்தைச் சேர்ந்தது என்பதில் சந்தேகம் இல்லை, என்ருலும் இந்த ரஜோகுணத்துக்குச் சத்துவ குணமே ஆதாரம். ஆகவே அதனல் தீமை ஒன்றும் நேராது.

''மக்களுக்கு மத போதனைகளை அருளுவதற்காகவும், அவர்களுக்குக் கடவுளைப் பற்றிப்

பேசுவதற்காகவும், சுகதேவரும் அவரைப் போன்ற மற்றைய முனிவர்களும் தங்களுடைய உள்ளத்தில் தயை என்னும் குணத்தை விடாமல் வைத்திருந்தார்கள்.

''தாங்கள் அறிவையும் உணவையும் வழங்கி வருகிறீர்கள். அதுவும் நல்லதுதான். இந்தச் செயல்களைத் தன்னலமற்ற முறையில் நீங்கள் செய்து வருவீர்களானால், அவைகள் கடவுளை அனுபூதியில் நீங்கள் உணர்ந்துகொள்ள துணை செய்யும். ஆனால் மக்களில் பெரும்பாலானவர்கள் புகழுக்காகவோ, புண்ணியம் சம்பாதிப்பதற்காகவோ கர்மத்தில் ஈடுபடுகிறார்கள். அவர்களுடைய செயல்கள் தன்னலமற்ற பணிகள் ஆகாது. அதுமட்டும் இல்லாமல் நீங்கள் ஏற்கனவே 'சித்தி'*யை அடைந்து விட்டீர்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: (புன்முறுவலுடன்) ''உருளைக்கிழங்குகளும் வேறு காய்கறிகளும் 'சித்தி நிலை' அடையும்போது (நீரில் வெந்த பிறகு) மென்மை அடைகின்றன. அதைப்போல நீங்களும் மென்மையான உள்ளம் உடையவர்; மிகவும் இரக்க மனப்பான்மை உடையவர்.''

வித்யாசாகர்: ''ஆனால் சில பொருள்களை வேக வைக்கும்போது நீர் வறண்டு இறுகிவிடுவதும் உண்டல்லவா?'' (சிரிப்பு)

ஸ்ரீராமகிருஷ்ணர்: ''இல்லை, இல்லை. நீங்கள் அந்த வகையைச் சேர்ந்தவரில்லை. நோய்க்கு வசப்பட்ட காய்கள் என்றைக்குமே பழுக்காமல் வெம்பி அழுகும்; அவைகளைப் போன்றே வெறும் நூலறிவு பெற்றுள்ள பண்டிதர்களும் மேலே முன்னேறிச் செல்லாமல் இடைவழியிலேயே நின்று விடுகிறார்கள். கழுகுகள் ஆகாயத்தின் வெகு உயரத்தில் பறக்கும். ஆனால் அவைகளின் கண்கள் தரைமீதுள்ள அழுகிய மாமிசத்திலே பதிந்து கிடக்கும். வெறும் நூலறிவு கொண்டவர்கள் பெயரளவில் மட்டுமே பண்டிதர்கள் என்ற பெயரை வகிக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள், கழுகுகள் மாமிசத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பதைப் போல, காமத்தின் மீதும் பொன்னின் மீதும் பற்று கொண்டிருக்கிறார்கள். பற்று, அவித்தை (அறியாமை) உலகத்தைச் சேர்ந்தது. தயை, பக்தி, துறவு மனப்பான்மை ஆகியவைகள் வித்தையால் (மெய்ஞ்ஞானத்தால்) வரும் மேன்மைகளாகும்.''

*சித்தி-பரிபூரண நிலை, முடிந்த நிலையைப் பெற்றுவிட்ட முனிவர்.

வித்யாசாகர், ஸ்ரீராமகிருஷ்ணரின் மொழிகளை மௌனமாகக் கவனித்தார். மற்றவர்களும் குருதேவரை உற்றுப் பார்த்துக்கொண்டும், அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்துக்கொண்டும் இருந்தனர்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: ''வித்யை (ஞானம்), அவித்தை (அஞ்ஞானம்) ஆகிய இரண்டுக்கும் பிரம்மம் அப்பாற்பட்டது. அது துவைதம் என்னும் மித்தையாகிய மாயையைக் கடந்தது.

''பிரம்மம் இத்தகையது என்பதை வார்த்தைகளால் வரையறுத்துச் சொல்ல முடியாது. வேதங்கள், புராணங்கள், தந்திர சாஸ்திரங்கள், ஆறு தத்துவ தரிசனங்கள் ஆகிய உலகில் உள்ள எல்லாமே, நாக்கில்பட்ட உணவு போல எச்சிலாக்கப்பட்டுள்ளன. இவ்விதம் நாவினால் எச்சில் படாமல் இருப்பது ஒன்றே ஒன்றுதான். அதுவே பிரம்மம். பிரம்மம் எப்படிப் பட்டது என்பதை இதுவரையிலும் யாராலும் எந்தக் காலத்திலும் சொல்ல முடியவில்லை.''

வித்யாசாகர்: (தமது நண்பர்களிடம்) ''இது ஒரு மேலான அரிய கருத்து. இன்றைய தினம் நான் புதிதாகச் சில உண்மைகளைக் கற்றுக் கொண்டேன்.''



ஓம்

விஜயதீபம்

புதிய ஆண்டின் தோரண வாயில்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே யெண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நசித்திடல் வேண்டு மன்னுய்.

—மகாகவி பாரதியார்

கடவுளின் திருவருளைப் பக்திபூர்வமாக வேண்டிப் பிரார்த்தித்து 'விஜயம்' தனது 58-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

வாசகர்களாகிய பேரன்பிற்குரிய ஆன்மீக சகோதர சகோதரிகள் அனைவருக்கும், 'விஜயம்' தனது ஆழ்ந்த அன்பையும், புத்தாண்டு—பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

நம்மிடமே நாம் நம்பிக்கை கொள்வது, தெய்வத்திடம் ஆழ்ந்த நம்பிக்கை கொள்வது —ஆகிய இந்த இரண்டு பண்புகளும் நம்மிடம் கோயில் கொள்ளும்போதுதான், நாம் பெற்ற மனிதப் பிறவியைச் சரியான வகையில் பயன்படுத்தியவர்கள் ஆவோம்.

சுயநலம் தொலையும் இடத்தில்தான் தெய்வீகம் பிரகாசிக்க முடியும். சுயநலமிகள் சாமர்த்தியமாக வாழ்வதாகத் தோன்றலாம். ஆனுல், அவர்கள் வாழும் வாழ்க்கை முடிவில் அவர்களை நரகத்தில் ஆழ்த்தும் என்பது நிச்சயம். பிறர் பொருட்டு வாழும் தியாக வாழ்க்கை, தப்பாமல் நம்மைத் தெய்வத்திடம் கொண்டு சேர்க்கும். 'தனி மனிதனின் நிலை உயர்த்தப்பட்டால் சமுதாயமும் தேசமும் உயர்வடைந்தே தீரும்' என்பது விவேகானந்த வாக்கு. தனி மனிதனின் வாழ்க்கை சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். உயர்ந்த வாழ்க்கையை வாழ்வதும் சாத்தியம்தான் என்பதை, ஒரு சிலராவது தமது நடைமுறை வாழ்க்கையின் மூலம் எடுத்துக்காட்டுவது சமுதாயத்துக்கு மிகுந்த நன்மையைத் தரும். ஊரின் நடுவே உள்ள பழமரம் போலவும், ஊருணி போலவும், தெய்வ பக்தியும் தேச பக்தியும் இணைந்த வகையில் நமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இறைவனை நெஞ்சாரப் பிரார்த்திப்போமாக.

மன அமைதி இல்லாமல் பரிதவிப்பவர்கள் பலர் என்னும் நிலைமை, நாளுக்கு நாள் பெருகி வருகிறது. தெளிந்த ஆன்மீகக் கருத்துகளின் அடிப்படையில் தெய்வத்தைச் சார்ந்து வாழ்வதாலும், சீரிய ஒழுக்கங்களை அன்றாட வாழ்க்கையில் கடைபிடிப்பதாலும்தான் மன அமைதியைப் பெற முடியும்.

நீர்க்குமிழி என்றும், மின்னலைப் போல நிலையில்லாதது என்றும், வாழ்க்கையைப் பெரியவர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள். சிறிது காலம் உலகில் வாழும் வாய்ப்பைப் பெற்றுள்ள நாம், அற்ப லாபங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் பலியாகிவிடாமலும், ஆண்டவனைத் துதித்தும், ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவியும் அன்பு காட்டியும் வாழ முயல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஃ ஃ ஃ

எதையெல்லாம் புனிதம் என்று நாம் கருதுகிருேமோ, அவைகளையெல்லாம் கடந்த புனிதராக விளங்கியவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர். அவரது வாழ்வும் வாக்கும், அவசர உல

கில் வாழும் மக்களின் பலநூறு பிரச்னைகளைத் தீர்த்து அமைதி தரும் அருமருந்தாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

'நாம் முதலில் மனிதர்களை உருவாக்க வேண்டும்', 'மனிதனை மனிதனுக்கும் மதம் தான் தேவை', 'நாம் முதலில் தெய்வமாவோம்; பிறகு மற்றவர்களையும் தெய்வமாக்குவோம்'—என்பதைப் போன்ற பல நூறு ஆக்கபூர்வமான கருத்துகளை, பாரதப் பாரம்பரியத்தின் சின்னமாக விளங்கிய சுவாமி விவேகானந்தர் தமது வாழ்வாலும் வாக்காலும் தெளிவுபடுத்தி இருக்கிறார். அவரே தமது கருத்துகள் அத்தனையையும் சுருக்கி '**ஆத்மனோ மோட்சார்த்தம் ஜகத் ஹிதாய ச**' என்னும் தாரக மந்திரத்தையும் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் கருத்துகளை மக்கள் முன்பு வைக்கும் பணியே ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தின் பணியாகும்.

கடந்த ஆண்டு, பல உயர்ந்த உள்ளங்கள் பாராட்டும் வகையில் விஜயத்தின் பணிகள் அமைந்தன. அவர்களின் நல்ல எண்ணத்துக்குக் குறைவுபடாத வகையில் விஜயம் தனது பணியைத் தெய்வப் பணியாக இப்புதிய ஆண்டில் தொடர்கிறது.

'விஜயம்' பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட காலத்தையும் விட, இப்போதைய சூழ்நிலைகளுக்குத்தான் அதன் பணி மிகமிகத் தேவைப்படுகிறது என்றால் மிகையாகாது.

எனவே, இந்த ஆண்டு தனது இலட்சியங்களில் இருந்து எள்ளளவும் பிறழாமலும், புதியதோர் உத்வேகத்தோடும் விஜயம் செயல்பட எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக.

புதிய ஆண்டின் துவக்கத்தில் அன்பர்கள் அனைவருடைய மனமார்ந்த ஒத்துழைப்பையும் விஜயம் கோருகிறது.

எப்போதும்போல உண்மையான தெய்வ பக்தி, தேச பக்தி, தியாகம், அன்பு, தொண்டு, ஒழுக்கம் ஆகிய அறப்பண்புகளை வழிபாட்டுக்குரிய மகான்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி விஜயம் விளங்கும்.

நம்மைப் பல்வேறு காரணங்களால் பீடித்துள்ள மறப் பண்புகள் தொலையவும், அறப் பண்புகள் ஓங்கிச் செழிக்கவும், கருணைக் கடலாகிய எல்லாம் வல்ல இறைவனை மனம் கசிந்து பிரார்த்திப்போமாக.

புதிய ஆண்டின் நுழைவாயிலில் மனமார்ந்த வாழ்த்துக்களுடன், 'விஜயதீபம்' பாரதியின் பாடலுடன் அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைத்துச் செல்கிறது.

ஒளிப டைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிப டைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா
ஏறு போல்ந டையினாய் வா வா வா

—கவியரசர் பாரதி

மரணத்துக்குப் பின்பும், மனிதனுடன் கூடச் செல்லும் ஒரே தோழன் நீதிதான்.

—மனு

தன்னிடம் கடவுளைக் காணாதவர்களுக்குக் கடவுள் இல்லை.

—டால்ஸ்டாய்

கெட்ட நண்பர்களுக்கு மூன்று அடையாளங்கள்

1. இரகசியமாக வாய்க்குள் சிரித்துக் கொள்வது.
2. செய்த உதவிக்கு மாத்திரம் நல்லது செய்வது.
3. நாம் ஏதாவது கெட்ட காரியங்கள் செய்திருந்தால் அதை மனதில் வைத்துக் கொள்வது.

—ஆசார்ய ஸுந்தர பண்டிதர்



உயர்ந்த வாழ்க்கை

திருமுருக கிருபானந்தவாரியார்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆசை உள்ள இடத்தில் கோபம் உண்டாகும். கோபம் உண்டானால் மயக்கம் வரும். ஆசைகள் பல. பல வளையங்கள் கூடிச் சங்கிலியாகக் காட்சி தருவது போல, பலப் பல ஆசைகள் சேர்ந்து சங்கிலிபோல் நம்மைப் பிணைத்திருக்கிறது.

"ஆசாநிகளம் துகளாயின" என்கிறார் அருணகிரிநாத சுவாமிகள். திடீரென்று எல்லா ஆசைகளையும் அகற்ற முடியாது. சங்கிலியை ஒவ்வொரு வளையமாகக் கழற்றுவதுபோல், சிறிது சிறிதாக நம் ஆசைகளைக் குறைத்து அகற்ற வேண்டும்.

பணத்தின் மீதுள்ள ஆசையை அகற்றி, இறைவன் நமக்குத் தந்த பணத்தைத் துன்பத்தில் துடிக்கும் வறியார்க்கு வழங்க வேண்டும்.

சிறிது காலத்துக்குப் பின் மனைவி மீதுள்ள ஆசையை அகற்றி, அவளைச் சகோதரியாக, அன்னையாகக் கருத வேண்டும்.

சிலர் தன்னைப் பற்றிச் செய்தித் தாளில் வந்தால், அதைக் கத்தரித்து எடுத்து உறுதியான தாளில் ஒட்டி வைத்துப் பலருக்கும் காட்டி மகிழ்வார்கள். ஏன்? இது புகழ் மீதுள்ள ஆசை. இதுதான் கடைசியான ஆசை. இதனையும் அகற்ற வேண்டும். பெரிதும் முயன்று ஆசையைக் களைந்து அன்பை வளர்க்க வேண்டும்.

துன்பம் ஆசையால் விளைவதனால், ஆசையை அகற்றினால் துன்பங்கள் அகலும். தொடர்புடையார் மாட்டுப் பயன் கருதி வைக்கும் விருப்பம் ஆசை; தொடர்புடையார் மாட்டுப் பயன் கருதாமல் வைக்கும் விருப்பம் அன்பு ஆகும். இது தூயது.

இறைவனிடத்துப் பயன் கருதா அன்பு செய்ய வேண்டும். இறைவனிடத்திலே முக்தியைக்கூட விரும்பக்கூடாது.

"கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்குவார்"

—பெரிய புராணம்

அன்புடையார் தமது என்பையுமே பிறர்க்குப் பயன்படுமாறு புரிவர். அப்படிச் செய்தவர் ததீசி முனிவர்.

அன்புடையார்தான் உண்மையான மனிதர். ஆசை உடையார் மனித விலங்குகள்.

அன்பு வளர்ந்து வளர்ந்து வெள்ளமாக ஊற்றெடுத்து ஓட வேண்டும்.

இதற்கு மேல், காய் கனியாகப் பழுப்பது போல் அன்பு அருளாக மாற வேண்டும். அன்பிலிருந்து அருள் பெருகும். இதனைத் திருவள்ளுவர், "அருள் என்னும் அன்பீன் குழவி" என்கிறார்.

அன்புக்கும் அருளுக்கும் என்ன வேறுபாடு?

அன்பு என்பது தொடர்புடையார் மாட்டுப் பயன் கருதாமல் வைக்கும் விருப்பம்.

அருள் என்பது தொடர்பு இல்லாதவர்களிடம் வைக்கும் கருணை.

அழுகிற தன் குழந்தைக்குத் தாய் பால் தருகிறாள். இது அன்பு.

தெருவில் அழுகிற வேற்றுக் குழந்தையை எடுத்துப் பழமும் பாலும் தந்தால் அது அருளாகும்.

தொடர்புடைய நண்பனுக்கு ஒரு சிறிதும் பயன் கருதாமல் புரியும் உதவி அன்பின்பாலதாகும். தெருவில் உணவும் உடையும் இன்றிக் கோடைப் பயிர்போல் வாடி நிற்கும் ஒருவனுக்கு, அவன் கேளாமுன் குறிப்பறிந்து உண்டியும் உடையும் தந்து கடமை உணர்ச்சியுடன் செய்கின்ற உபகாரம் அருளின்பாலதாகும்.

இந்த அருளுடையார் தெய்வமாக நின்று உலகம் போற்ற விளங்குவார்கள்.

ஆசையுடையார்—விலங்கு
அன்பு உடையார்—மனிதர்
அருளுடையார்—தெய்வம்

அருளுடையவர்களே தெய்வத்தைக் காண்பார்கள். இந்த அருட் கண்கொண்டு பார்த்தால் உலகமெல்லாம் கடவுள் சொரூபமாகத் தோன்றும்.

அருள் கொண்டு செய்யும் செயல்கள் ஒன்றுக்குக் கோடி மடங்கு உயர்வு பெறுகிறது.

நாம் ஒரு வறியவனுக்கு அன்பால் செய்கிற உதவியினும், அருளால் செய்கிற உதவி அளவற்ற உயர்வுடையதாகும்.

'இவன் ஒரு மனிதன்; ஏழை. நாம் இவனுக்கு உபகரிக்க வேண்டும்' என்று எண்ணிச் செய்கிற உதவியைக் காட்டிலும், "அந்த ஏழை உள்ளத்தில் கடவுளைக் கண்டு, இந்த ஏழை கடவுளின் கோயில்; இவனுக்குச் செய்யும் உதவி கடவுளுக்குத் தந்த காணிக்கையாகும்—என்று செய்வது எத்துணை புனிதமானது என்று சிந்தியுங்கள். நாம் உபகரித்தோம் என்ற எண்ணமே அங்கு தலைகாட்டாது. அவன் தாழ்ந்தவன், நாம் உயர்ந்தவன் என்ற மமதை உணர்ச்சிக்கும் அங்கு இடமில்லை. ஒரே அருள் உணர்ச்சிதான்.

அருள் சேராத நெஞ்சினர்கள், இருள் சேர்ந்த துன்ப உலகில் சென்று இடர்ப்படுவார்கள்.

இறந்தவுடனே நம் வாழ்வு முடிந்துவிட்டது என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. மரணத்துக்குப் பின்னும் வாழ்வு இருக்கிறது.

புகை வண்டியை விட்டு நாம் இறங்கிய பின்னும் வாழ்கிறோம் அல்லவா?

ஸ்தூல உடம்பு நீங்கியபின், உயிர் சூட்சும உடம்புடன், தான் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப இன்ப துன்ப உலகினை அடைந்து சுக துக்கங்களை நுகர்கிறது.

அருளுடையார், இருளுடைய துன்பவுலகம் எய்தார் என்று முன்னே கூறிய கருத்து திருவள்ளுவருடைய கருத்தாகும்.

அருள் சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள் சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

இதனைப் பலமுறை படியுங்கள். உங்கள் உள்ளம் அன்பாலும் அருளாலும் உயரும்.

அருளில்லாதார் துன்பவுலகம் புகுவார் என்ற கருத்தை, நேரே அவ்வாறு கூறாமல், ''அருளுடையார் துன்ப வுலகம் புகமாட்டார்'' என்று அருளோடு கூறுகிறார் திருவள்ளுவர்.

அருளுடையார் துன்ப உலகம் புகார் என்றதனால், அருத்தாபத்தி நியாயத்தால், அருள் இல்லாதார் துன்ப உலகம் புகுவார் என்பது உறுதியாயிற்று.

இந்த அருளின் உச்சியில் இருப்பது தியாகம். அருளுடையார் தமது சொல், செயல், தமது உடைமை எல்லாவற்றையும் தியாகம் செய்து விடுவார்கள். தியாகம் புரிந்தோம் என்ற எண்ணத்தையும் தியாகம் செய்து விடுவார்கள். இறுதியில் தன்னையே தியாகம் செய்து விடுவார்கள். இவர்களின் தியாகத்தால் உலகமே உயர்ந்து இன்பம் எய்தும்.



கடவுளிடம் குழந்தை உள்ளத்துடன் கொள்ளும் எளிய நம்பிக்கை, நிலத்திலிருந்தோ, நீரிலிருந்தோ, தோன்றும் எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்துவிடும். —ஹெலன் கெல்லர்

களங்கமற்ற தனி சத்துவகுணமுள்ள மனமுள்ளவர்கள் கிடைத்ததை அனுபவிப்பார்கள். யான் எனது என்னும் அகந்தை இல்லாமல் இருப்பார்கள். இத்தகையவர்களை ஜீவன் முக்தர்கள் என்று சொல்லலாம்.
—கைவல்யம்

பொருள்களை அடிக்கடி சிந்திப்பதால் அவற்றில் பற்று உண்டாகிறது. பற்று உண்டாவதால் அதன் மேல் ஆசை உண்டாகிறது. ஆசை நிறைவேறாதபோது கோபம் உண்டாகிறது. கோபம் உண்டாகும்போது புத்தி தடுமாறி கெடுகிறது. புத்தி கெடுவதால் மனம் கலக்கமடைந்து நாசமடைகிறது.
—பகவத் கீதை



பிரார்த்தனை

1

மனதாலும் சொல்லாலும் செயலாலும் என்னென்ன பாவங்களை நான் செய்திருந்தாலும், வலிமைக்கும் ஞானத்திற்கும் தூய்மைக்கும் உறைவிடமான பரம்பொருள் என்னை மன்னித்து, அந்தப் பாவங்களைப் போக்கித் தூய்மை அளிப்பதாக!

பாவங்களினின்றும், அழுக்குகளினின்றும், கட்டுகளினின்றும், கேடுகளிலிருந்தும் விடுபட்டு மிக உயர்ந்த பரலோகத்தை அடைவேனாக! எல்லாம் வல்ல பரம்பொருளில் நான் உறைவேனாக!

ஜோதிமயமான பரம புருஷனின் தூய, எங்கும் பரந்த, அழியாத ஸாந்நித்தியத்தால் தூய்மை அடைந்து, மனிதன் தீமையினின்றும், நீக்கம் பெறுகிறான். அனைவரையும் தூய்மைப் படுத்தும் அந்தப் பரிசுத்த ஸாந்நித்தியத்தால் எல்லா மலங்களினின்றும் விடுபட்டு, நமது பெரும் பகைவனாகிய பாவத்தின் வசப்படாது, தாண்டிச் செல்வேனாக.

—தைத்திரிய ஆரண்யகம்

2

அறியாமைப் பேரிருளுக்கப்பால் ஒளிரும் பரஞ்ஜோதியான பொருளை அறிபவன் மரணத்தைத் தாண்டுகிறான். அறிதற்குரிய அப்பரம் பொருளுக்கு என் வணக்கம்.

துறவு பெற்றுச் சாந்தி அடைந்தவர்கள் தமது புண்ணிய பாவங்கள் ஒழியப்பெற்று, மீண்டும் பிறக்கும் அச்சம் நீங்கியவராய் அந்த பரம்பொருளை அடைந்து முக்தராகின்றனர். முக்தி வடிவாயுள்ள அப்பரம்பொருளுக்கு என் வணக்கம்.

அவரிடமே எல்லாம் உள்ளன. அவரிடமிருந்தே அனைத்தும் உற்பத்தியாகின்றன. அவரே எல்லாம் ஆகி உள்ளார். அவர் அங்கிங்கெனாதபடி எங்கும் உள்ளவர். அவரே எல்லாமயமும் ஆகிறார். அனைத்திற்கும் ஆத்மாவாகும் அந்தப் பரம்பொருளுக்கு என் வணக்கம்.

—சாந்தி பர்வம். (மகாபாரதம்)

3

எமது வாக்கு உமது குணங்களைப் பேசுவதிலும், எமது காது உமது புகழைக் கேட்பதிலும், எமது கைகள் உமது பணியை இயற்றுவதிலும், எமது மனங்கள் உமது தூய திருவடிகளைப் பற்றிய தியானத்திலும், எமது தலைகள் உமது இருப்பிடமாகிய உலகத்தை வணங்குவதிலும், எமது கண்கள் உமது உடலாக விளங்கும் மகான்களைக் காண்பதிலும் ஈடுபடட்டும்.

இறைவா! நீ ஏகமாய், ஆத்மாவாய், அந்தர்யாமியான புருஷனாய், பழமையானவனாய் இருக்கின்றாய். நீ சத்தியப் பொருள், சுயஞ்ஜோதி, அந்தமற்றவன், ஆதியாவாய்! நீ நித்தியமாய், அழிவற்றவனாய், ஒழிவற்ற பேரின்ப வடிவாய், களங்கமற்றவனாய் விளங்குகிறாய். நீ பூரணப்பொருள், இரண்டற்ற அதீதப் பொருள், இறப்பற்றவன்!

—ஸ்ரீமத் பாகவதம்

கடவுள் இல்லாத மனச்சான்று நீதிபதி இல்லாத நியாய மன்றமாகும். மனச்சான்றை மதிக்காமல் இருந்தால் அது பழிவாங்காமல் போகாது.

—ஸவுத்



உபவாசம்

> தெய்வத்தை அணுகச் செய்யும் எதையும் நாம் வரவேற்கலாம். உபவாசம், ஆன்மீக நலனுக்கும் உடல் நலனுக்கும் பெரிதும் துணை புரிகிறது.

உபவாசம் என்னும் வடமொழிச் சொல் லுக்கு பகவானுடைய அருகில் வசித்தல் என்பது பொருள்.

கடவுள் வழிபாட்டில் உபவாசத்துக்கு ஒரு முக்கிய இடத்தை நமது முன்னோர்கள் வழங்கி இருக்கிறார்கள். சிவராத்திரி, கிருஷ்ணாஷ்டமி, ஏகாதசி முதலிய விசேஷ நாட்களிலும், உபநயன விரதம், விவாக விரதம் முதலிய வைதிக கர்மங்களிலும் பட்டினி இருப்பதை விதியாக அமைத்திருக்கிறார்கள்.

பட்டினி இருப்பதால் உடல் சுத்தியும், சித்தத் தெளிவும், மேற்கொள்ளும் காரியங்களில் ஊக்கமும், ஒருநிலைப்பாடும் உண்டாகின்றன. இந்த உண்மை, வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவைகளில் அடிக்கடி வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. இதற்கு நசிகேதன், பிரகலாதன், துருவன் ஆகியவர்களை உதாரணங்களாகச் சொல்லலாம்.

யமதர்மராஜனிடமிருந்து ஞான தீட்சையைப் பெறுவதற்காக, நசிகேதன் மூன்று நாட்கள் உபவாசம் இருந்தான்.

பிரகலாதன் உணவு, உறக்கம் ஆகியவைகளை முற்றிலும் மறந்து தெய்வத்தைத் தியானித்தான்.

பால் மனம் மாறாத துருவன், சர்வ லோக நாயகனாகிய நாராயணனை நாரத முனிவருடைய உபதேசத்தின்படி தீவிரமான விரதத்தால் உபாசித்தான்.

துருவன் செய்த தவம் மிகவும் அற்புதமானது. அந்தத் தவத்தை பாகவதம் பின்வருமாறு கூறுகிறது: ''மூன்று நாட்களுக்கு ஒருமுறை தன் உடல் நிலையை அனுசரித்து, துருவன் விளாம்பழங்களையும், இலந்தைப் பழங்களையும் உணவாகக்கொண்டு பகவான் ஹரியை பூஜித்து ஒரு மாதத்தைக் கழித்தான். இரண்டாவது மாதத்தில் ஆறு நாட்களுக்கு ஒருமுறை புல், இலை முதலியவைகளை உட்கொண்டு அலைபாயும் மனதின் விகாரங்களை ஒடுக்கினான். மூன்றாவது மாதத்தில் ஒன்பது நாட்களுக்கு ஒருமுறை தண்ணீரை அருந்தி சமாதியில் நின்றான். நான்காவது மாதத்தில் பன்னிரண்டு நாட்களுக்கு ஒருமுறை காற்றை உட்கொண்டு மூச்சை அடக்கினான். அந்த நிலையில் பிரம்மத்தைப் பற்றிய தியானத்தில் ஆழ்ந்து மரம் போல அசையாமல் நின்றான். சப்தம் முதலியவைகளும் இந்திரியங்களும் அடங்கக்கூடிய மனதை, எல்லாவற்றிலும் இருந்து இழுத்து இதயத்தில் பகவானுடைய வடிவத்தைத் தியானம் செய்து வேறு எதையும் துருவன் பார்க்கவில்லை! இத்தகைய அரிய தவத்தால் காண்பதற்கரிய கண்ணனின் தரிசனத்தை இந்தச் சிறுவன் எளிதாகப் பெற்றான்.'' ஆகவேதான், இப்படிப்பட்ட தவத்துக்கு 'உபவாசம்' என்பது காரணப்பெயராக அமைந்தது.

உபவாசம் மகிமை உடையது. இதை உணராத சிலர், 'பகவான் கீதையிலே உபவாசத்தைக் கண்டித்திருக்கிறார்; பட்டினி இருப்பது ஆத்ம வஞ்சனை ஆகும்' என்றும் கூறுவதுண்டு. இத்தகையவர்கள் 'உடல்தான் ஆத்மா' என்னும் கொள்கை உடையவர்கள். அவர்கள், உண்டும் உடுத்தும் கூத்தாடுவதையும் தவிர, வாழ்க்கையில் பெரிய இலட்சியம் ஒன்று உண்டு என்பதை மறந்து விடுகிறார்கள்.

புலன்களுக்கு அடிமைப்பட்டும், கடவுளை அடைவதற்காகத்தான் பிறந்திருக்கிறோம் என்பதை மறந்தும் வாழும் மக்களுக்கு, நல்வழி காட்டவே உபவாசம் அமைந்திருக்கிறது.

உபவாசம் அனுஷ்டிப்பது ஆத்மாவை வஞ்சிப்பது ஆகாது. மாறாக, ஆத்மாவைக் காப்பாற்றக்கூடியதாகும். இத்தகைய தவத்தை பகவான் கீதையில் கண்டிக்கவும் இல்லை. டம்பம், அகங்காரம், காமம், ஆசை ஆகியவைகளால் தூண்டப்பட்டு மேற்கொள்ளப்படும் கொடிய தவத்தையே கீதையில் பகவான் கண்டிக்கிறார். 'யக்ஞம், தானம், தவம் ஆகிய மூன்றும் அவசியம் கடைப்பிடிக்க வேண்டியவைகளாகும். இவைகளே மனிதனுக்குத் தூய்மை தருகின்றன'—என்பது கீதையின் தெளிந்த ஒரு கருத்தாகும்.

சோம்பலாலும் உடல் நலிந்துவிடும் என்னும் பயத்தாலும், தவத்தைக் கைவிடுவது தவறு.

அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காகவே நமது மதத்தில் காம்ய கர்மங்களிலும், சிரார்த்த கர்மங்களிலும், நிஷ்காம்ய கர்மங்களிலும், மற்றும் பல இடங்களிலும் உபவாசங்கள் விதிக்கப்பட்டுள்ளன.

உணவைப் பற்றிய எண்ணங்களை நீக்கி, தூய உள்ளத்துடன் உபவாச காலங்களில் ஆண்டவனிடம் மனதைச் செலுத்த முயற்சிக்க வேண்டும். அவ்விதம் இல்லாத நிலையில் விரதம் முழுவதும் வீண் டம்பமாக அமைந்துவிடும்.

உணவு காரணமாக உடலும் உள்ளமும் எவ்வளவோ மாறுதல்களைப் பெறுகின்றன. நாம் உட்கொள்ளும் உணவு மூன்று பாகங்களாகப் பிரிகிறது. ஸ்தூலபாகம் வெளியே தள்ளப்படுகிறது. மத்யபாகம் மாமிசமாக மாறுகிறது. சூட்சும பாகம் மூளையாக அமைகிறது. பாலைக் கடையும்போது அதன் சாராம்சம் வெண்ணையாக மேலே கிளம்புவதைப் போல, அன்னத்தின் உயர்ந்த பாகமே மூளையாக மாறுகிறது. எனவேதான், மனம் 'அன்னமயம்' எனப்படுகிறது.

உட்கொள்ளும் உணவுக்கு ஏற்ப மனம் விகாரம் அடைகிறது. பழைய சாதம் சாப்பிட்டாலும், லாகிரி வஸ்துக்களை உபயோகித்தாலும், அளவுக்கும் அதிகமாகச் சாப்பிட்டாலும், சோம்பலும், மயக்கமும், தூக்கமும் உண்டாகிறது. காப்பி, தேனீர் முதலியவைகள் ரஜோ குணத்தையும் பரபரப்பையும் மிகைப்படுத்துகின்றன.

பால், பழம் முதலிய சாத்வீக உணவுகள் மன அமைதியையும் மன வலிமையையும் தருகின்றன. மன ஒருமைப்பாட்டை நாடுபவர்கள் ஆகார நியமங்களைக் கைக்கொள்வதும் அவசியம்.

யோக சாதனத்தில் பிராணாயாமம் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. அதைப் போலவே இடையிடையே உபவாசத்தையும் பக்தி வாழ்க்கையில் ஈடுபவர்கள் முக்கியமாகக் கருத வேண்டும்.

'சரீரமாத்யம் கலு தர்ம ஸாதனம்'

அதாவது ஞான சாதனைக்கு உடல் நலம் முக்கியம் என்று பெரியோர்கள் கூறியுள்ளார்கள். உடல் யாத்திரை நடைபெற வேண்டும் என்னும் கருத்தில் சாத்வீக உணவை மிதமாக உட்கொள்ள வேண்டும்.

அத்யாவசியம் என்னும் தேவைக்கும் அதிகமாகச் சாப்பிட்டால், அதிகமாக உள்ள பகுதி கொழுப்பாக மாறி அங்கங்களின் இயல்பான சுறுசுறுப்பைக் குறைத்து விடுகிறது; அதோடு அவயங்கள் தத்தம் வேலைகளைச் சரிவர செய்ய இயலாத வகையில் தடுக்கவும் செய்கிறது.

அதிக உணவை அடிக்கடி உட்கொள்ளுவதால், செக்கு மாட்டைப் போல வயிறு அதிகமாக உழைக்க நேருகிறது. நாக்கின் அற்ப சுகத்தை விரும்பி, வயிற்றுக்குக் கடுமையாக வேலை தருவது அறிவுடைமை ஆகாது. 'ஒரு நாளுணவை ஒழியென்றா லொழியாய்' என்று வயிற்றைப் பார்த்துச் சொல்வதும் பொருந்தாது. இடைவிடாமல் நாள்தோறும் உழைக்கும் வயிற்றுக்கு ஒருவேளையாவது நிம்மதியாயிருக்க அவகாசம் கொடுக்க வேண்டும்.

பட்டினியால், உடலில் சேர்ந்துள்ள அதிகமான கொழுப்புக் கரைந்து லகுவாகவும், சுகமாகவும் இருக்கும். இதன் காரணமாக பல நோய்களும் தடுக்கப்படும். நோய் ஏற்படும் போது 'லங்கணம் பரம ஔஷதம்' என்று சொல்வதைப் போல, பட்டினியைவிட சிறந்த மருந்து இல்லை எனலாம்.

ஒருவேளை பட்டினி இருந்தாலும் உடல் அழிந்து விடுமோ என்று பயப்படுபவர்களும் உண்டு. மகாத்மா காந்தியடிகள் இருபத்தொரு நாள் பட்டினியிருந்தாலும் உடல் அழிந்து விடாது என்பதைத் தாமே வாழ்ந்து காட்டி

ஞர். மேலே நாட்டில் காரிங்டன் என்னும் தத்துவமேதை ஒருவர், நாற்பத்து நான்கு நாட்கள் உடலுக்குச் சிறிதும் அபாயம் இல்லாமல் பட்டினி இருக்கலாம் என்று காட்டியிருக்கிருர்.

மாதம் ஒருமுறையோ இரண்டு முறையோ உபவாசம் இருப்பதால் வலிமை குறைந்து விடாது; மிகுந்த நன்மையே எற்படும்.

நாம் எவ்வளவு ஜாக்கிரதையுடன் இருந்தாலும் ஜீரணமாகாத பொருள்கள் இரத்தத்துடன் கலந்து, இரத்தத்தை அசுத்தப்படுத்துகின்றன. இதனுல் தொத்து நோய் கிருமிகள் வருவதற்குரிய வாய்ப்பு ஏற்படுகிறது. இந்தப் பொருள்கள் இடையிடையே உபவாசம் அனுஷ்டிப்பதால் எரிக்கப்பட்டு உடல் சுத்தி ஏற்படுகிறது.

உபவாச காலங்களில் அதிகமாகத் தண்ணீர் குடிப்பது நல்லது. உணவு சிறிதும் உட்கொள்ளாமல் இருப்பது நலம். உபவாச முடிவில் (பாரணை செய்யும்போது) பழங்களேயும், புளிப்பான மோரையும், அகத்திக்கீரை, நெல்லிக்கனி போன்ற துவர்ப்புப் பதார்த்தங்களேயும் சேர்த்துக் கொள்வது உடலுக்கு மிகுந்த நன்மை தரும்.

உபவாசம் போன்ற சிறந்த பழக்கவழக்கங்களே வழிபாட்டிற்குரிய நமது முன்னேர்கள் கடைப்பிடித்திருக்கிருர்கள். அவர்களின் அடிச்சுவட்டில் நாமும் வாழ்ந்து, இகபர இன்பங்களேப் பெறுவதே அறிவுடைமையாக இருக்க முடியும்.

மதிப்புரை

கதைப் பூங்கா

[வெளியிட்டோர்: தியாக பூமி, 32 சுவாமி நாய்க்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னே—600 002, விலே: ரூ. 5.]

தேசிய வார ஏடாகிய 'தியாக பூமி' தனது தீபாவளி மலரை, 'கதைப் பூங்கா' என்னும் தலேப்பில் வெளியிட்டுள்ளது. இதிகாசங்கள், புராணங்கள், பெரியோர்களின் வரலாறுகள் ஆகியவற்றின் அடிப்படையில் மாணவ, மாணவியர்களின் கதை, கட்டுரைகளேக் கொண்ட ஒரு நல்ல தொகுப்பு நூல் இது. 'நாங்களும் மலர் போட்டோம்' என்று இல்லாமல் உயர்ந்த இலட்சியங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இந்நூல், பள்ளி மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடிய வகையில் அமைந்துள்ளது.

இந்தியப் பண்பாட்டை விளக்கும் வகையிலும் மாணவச் செல்வங்களே ஊக்குவிக்கும் வகையிலும் 'கதைப் பூங்கா'வைத் தயாரித்திருக்கிருர்கள். தியாகம், அன்பு, தொண்டு, ஞானம், தேச பக்தி, தெய்வ பக்தி, வீரம், ஆண்மை போன்ற ஆக்கபூர்வமான கருத்துகளேக் கொண்ட இம்மலரைப் பெரிதும் பாராட்டுகிருேம்.

—பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா

ஸ்ரீ மகாகணபதி ஸ்தோத்திரங்கள்

[ஆசிரியர் வி. எஸ். வி. குருஸ்வாமி சாஸ்திரிகள். வெளியீடு: ஸ்ரீ அழகிய கன்னி விஞயகர் கோவில் டிரஸ்ட், தோவாளே P.O., கன்னியாகுமரி மாவட்டம். விலே: குறிப்பிடப்படவில்லே.]

வேதந்தப் பேராசிரியர் குருஸ்வாமி சாஸ்திரிகள் இந்நூலேத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிருர். ஸ்ரீ மகாகணபதி நவார்ண வேதபாதஸ்தவம், ஸ்ரீவர மகாகணபதி ஸ்தோத்திரம், மகாகணபதி ஸ்தோத்திரம் ஆகிய மூன்று சம்ஸ்கிருத நூல்களும் இத்தொகுப்பு நூலில், மூலம், தமிழ் லிபி, கருத்துரைகளுடன் தரப்பட்டுள்ளன.

இந்நூலில் இடம் பெற்றுள்ள ஸ்ரீமுகத்தில், ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், ''எளிய தமிழ் நடையில் மந்த்ர சாஸ்திர நுட்பங்களே விளக்குவாதாயிருக்கிறது. பக்தர்கள் இந்நூலே பொருளுணர்ந்து பாராயணம் செய்துகொண்டு ஸ்ரீ விஞயகப் பெருமானின் அனுக்ரஹத்தினுல் எல்லா மங்கலங்களேயும் அடைவார்களாக'' என்று குறிப்பிட்டிருக்கிருர்.

—விவேகானந்ததாசன்



என்ன செய்வீர்கள்?

அ. லெ. நடராஜன்

அரசையும் சுகபோக வாழ்வையும் துறந்தவர் புத்தர். அவர் புத்த சமயத்தைப் பிரசாரம் செய்து வந்தார்.

சிலர் புத்தர் பிரானின் போதனைகளை விருப்பத்தோடு ஆதரித்தார்கள். மற்றும் சிலர் அவர் போதித்த கொள்கைகளைத் தீவிரமாகத் தாக்கிப் பேசினர். கொள்கைகளைத் தாக்குவதோடு மட்டும் நில்லாமல், புத்தர் பெருமானையே ஏசித் தாக்கிப் பேசவும் தொடங்கினர்.

ஒருமுறை ஒரு மனிதன் புத்தர் பெருமானை வாயில் வந்தபடி எல்லாம் ஏசினான். நேரில் சென்று சந்தித்து அவரைத் தாக்கிப் பேசினான்.

அவன் ஏசின ஏச்சுக்களையெல்லாம் செவிமடுத்த புத்தர் முதலில் புன்முறுவல் பூத்தார். பிறகு தம்மை ஏசின மனிதனை நோக்கி, ''நண்பரே! அருகே வாருங்கள்!'' என்று கூப்பிட்டார்.

அவன் அருகே சென்றான். ''நண்பரே! உட்காருங்கள்'' என்று சொன்னார்.

அந்த மனிதன் உட்கார்ந்தான். ''நண்பரே! தாங்கள் யாரையாவது பார்க்கச் செல்லும்போது, கையில் ஏதாவது எடுத்துச் செல்வது உண்டா?'' என்று கேட்டார்.

''ஆம், பழங்கள் எடுத்துச் செல்வேன்'' என்று அந்த மனிதன் பதில் சொன்னான்.

''நீங்கள் கொடுக்கும் பழங்களை, தாங்கள் காணச் சென்றவர் ஏற்க மறுத்தால், பிறகு நீங்கள் அந்தப் பழங்களை என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டார் புத்தர்.

''திரும்ப எடுத்துக்கொண்டு வீடு திரும்புவேன்'' என்று பதில் சொன்னான் ஏசின மனிதன்.

''அதேபோலத்தான் நீங்கள் ஏசின ஏச்சுக்களை இப்போது நான் ஏற்றுக் கொள்ளவில்லை. பழங்களைத் திரும்ப எடுத்துக் கொள்வதைப் போல, ஏச்சுக்களையும் நீங்களே திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினார் புத்தர்.

உடனே அந்த மனிதன் தான் செய்த தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கோரினான். அவருடைய திருவடிகளில் வீழ்ந்து தன்னையும் சீடனாக அங்கிகரிக்குமாறு வேண்டினான்.

புத்தர் பிரான் மீண்டும் புன்முறுவல் பூத்தார்.



மகனே! நீ யார் சொல்?

க. கண்ணன்
ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த மன்றம்
பலக்கனூத்து, திண்டுக்கல்

கங்கை நதி தீரத்திலே ஒரு சிறிய குடில். அதில் ரிஷி ஒருவர் தவம் செய்து வந்தார்.

மாதவிபுரியின் அரசன் மாதவச்செல்வன். அவன் அன்றைய தினம் வேட்டையாடுவதற்காகக் காட்டுக்கு வந்திருந்தான். காட்டிலும் மலையிலும் நீண்ட நேரம் வேட்டையாடிய மாதவச்செல்வன், மிகவும் களைப்படைந்த நிலையில் தூரத்தில் ரிஷியின் குடில் இருப்பதைக் கவனித்தான்.

வேட்டையாடிக் கொண்டிருந்தபோது, அரசன் தனது படைவீரர்களை எல்லாம் விட்டுப் பிரிந்து நீண்ட தூரம் வந்திருந்தான். அரசனுக்கோ பசி வயிற்றைக் கிள்ளியது. அவனுக்கு உதவக்கூடிய வீரர்களும் யாரும் அருகிலே இல்லை. இந்த நிலையில் தூரத்தில் குடில் இருப்பதைக் கவனித்த அரசன் ‘அங்கு சென்று பசிக்கு ஏதாவது கேட்டு வாங்கிச் சாப்பிடலாம்’ என்று நினைத்தான். மகரிஷி வசித்து வந்த குடிலை நோக்கிக் குதிரையைச் செலுத்தினான்.

குடிலுக்கு உள்ளே ரிஷி ஒருவர் அமர்ந்திருந்ததை மாதவச்செல்வன் பார்த்தான்.

தெய்வீகம் ததும்பும் தயாளுவான ரிஷியின் அருகில் சென்று, அரசன் அவரை வணங்கி நின்றான். ரிஷியும் அரசனை நோக்கி, ‘குழந்தாய், நீ யார்?’ என்று அன்பு ததும்பக் கேட்டார். அவரது குரலிலே அப்படி ஒரு பாசம்! அப்படி ஒரு அமைதி!

அதற்கு அரசன் ‘மகராஜ், நான் இந்த நாட்டினுடைய அரசனாக இருக்கிறேன்’ என்று பதில் சொன்னான்.

> துறவியின் கேள்வி நாடாளும் மன்னனைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. அந்த இடத்தைவிட்டே அரசன் நழுவ நினைத்தான். ஆனால் துறவியோ விட்டுவிடுபவராக இல்லையே!

ரிஷியானவர் மாதவச்செல்வனை நோக்கி, ‘‘மகனே, நீ யார் என்றுதான் கேட்டேனே தவிர, உனக்கும் உன் நாட்டுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி நான் கேட்கவில்லை. மேலும் அரசன் என்பது ஒரு பதவியைக் குறிப்பதாகும். வேற்று நாட்டு அரசன் உன் நாட்டைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டால், உனது அரச பதவி பறிபோய்விடும். எனவே மகனே! உண்மையில் நீ யார்?’’ என்று கேட்டார்.

அரசனுக்கு ரிஷி கேட்ட கேள்வியால் மனதில் குழப்பம் ஏற்பட்டது. ரிஷியின் கேள்விக்கு அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

இந்த நிலையில் அரசனுடைய பசி அதிகரித்து விடவே, அவன் ரிஷியிடம், ‘‘மகராஜ்! நான் பசியாக இருக்கிறேன். சாப்பிடுவதற்கு ஏதாவது இருந்தால் தந்தருள வேண்டும்’’ என்று கேட்டுக் கொண்டான்.

மறுபடியும் ரிஷி அரசனிடம், ‘‘குழந்தாய், நான் கேட்டதற்கு நீ பதில் சொல்லவில்லையே! நீ முதலில் அரசனாக இருப்பதாகக் கூறினாய். இப்போது பசியாக இருக்கிறேன் என்று சொல்லுகிறாய். உண்மையில் நீ யார்?’’ என்று கேட்டார்.

மாதவச்செல்வனும் யோசிக்க ஆரம்பித்தான்: ''மகராஜ், முதலில் நீ யார்? என்று என்னை கேட்டார். நான் இந்த நாட்டின் அரசனாய் இருக்கிறேன் என்று பதில் சொன்னேன். பிறகு நான் பசியாக இருப்பதாகக் கூறினேன். உண்மையில் நான் யார்?'' என்று யோசித்துப் பார்த்தான். அவனுக்குப் பதில் கிடைக்கவில்லை. குழப்பம்தான் அதிகமாகியது.

முதலில் பசியைப் போக்கிக்கொண்டு, பிறகு ரிஷியின் கேள்விக்கு யோசித்துப் பதில் சொல்லலாம் என்று மாதவச்செல்வன் முடிவு செய்தான்.

அந்த முடிவுடன் அரசன் ரிஷியிடம், ''மகராஜ், நான் முதலில் எனது பசியைப் போக்கிக் கொள்கிறேன். பிறகு யோசித்து தங்களுடைய கேள்விக்குப் பதில் சொல்கிறேன்'' என்று கேட்டுக் கொண்டான்.

கங்கை ஆற்றின் மறுகரையிலே சத்தியகாமன் என்ற ஒரு பக்தன் வாழ்ந்து வந்தான். நாள்தோறும் அவன் ஆற்றைக் கடந்து வந்து, ரிஷிக்கு வேண்டிய உணவுப் பொருட்களைக் கொடுத்துவிட்டுச் செல்வது வழக்கம்.

அன்றைய தினமும் சத்தியகாமன் உணவுப் பொருள்களைக் குடிலுக்குக் கொண்டு வந்தான். அப்போது ரிஷியின் முன்னால் மாதவச் செல்வன் வீற்றிருந்தான். சத்தியகாமன் அரசன் இருப்பதைக் கவனிக்காமல் ரிஷியை மட்டும் தரையில் வீழ்ந்து வணங்கி எழுந்தான். பிறகு அவன், தான் கொண்டுவந்த உணவைக் குடிலில் வைத்துவிட்டுச் சென்றுவிட்டான்.

இதைக்கண்ட அரசன் 'இந்த பக்தன் என்னைக் கொஞ்சம் கூட பொருட்படுத்தியதாகவே தெரியவில்லையே' என்று நினைத்து மனச் சங்கடம் அடைந்தான். அதன் காரணமாக குடிலைவிட்டே வெளியே சென்றுவிட முடிவு செய்தான்.

மாதவச்செல்வன் அப்படி நினைத்த மறுகணமே ரிஷி அவனைப் பார்த்து, ''மகனே! அந்த பக்தனுக்கு நீதான் இந்த நாட்டின் அரசன் என்பது தெரியாது. தெரிந்திருந்தால் கண்டிப்பாக உன்னையும் அவன் வணங்கி இருப்பான். அரசன் என்பது ஒரு பதவி மட்டுமே ஆகும். அரசனாக இருக்கும் வரையில்தான் உனக்கு மதிப்பு உண்டு. நீ அரச பதவியை இழந்து வேறு ஒருவன் அரசனாகி விட்டால் உனக்கு இப்போதுள்ள மதிப்பு போய்விடும். ஆகவே இப்போது சொல். நீ யார்?'' என்று கேட்டார்.

அரசன் மீண்டும் ரிஷியிடம், ''தேவரீர் முதலில் எனது பசியைப் போக்கி அருளவேண்டும்'' என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

ரிஷியும் சம்மதித்தார். சத்தியகாமன் கொண்டு வந்த உணவை மாதவச்செல்வன் சாப்பிடுவதற்குக் கொடுத்தார்.

அரசன் சாப்பிடப்போகும் சமயம். அப்போது படைவீரன் ஒருவன், மாதவச்செல்வனைத் தேடி அவசர அவசரமாக ஓடி வந்தான். அரசனை வணங்கிய படைவீரன், வேற்றுநாட்டு அரசன் அரண்மனையை முற்றுகையிட்டு விட்டதாகவும், போரில் கலந்துகொள்ள அரசன் பெருமான் உடனே அவசரமாக வரவேண்டும் என்றும் வேண்டிக் கொண்டான்.

பசி வந்தால் பத்தும் பறந்து போய்விடும் என்பது உலக வழக்கு. அரசனுக்கு இப்போது படைவீரன் சொன்னதைக் கேட்டதும் பசியும் பறந்தோடிவிட்டது! அப்போதே போருக்குப் புறப்பட வீறுகொண்டு எழுந்தான். ரிஷி அரசனைத் தடுத்து, ''மகனே! சாப்பிட்டுவிட்டுப் பிறகு போகலாமே'' என்று அன்புடன் கூறினார்.

அரசன் பரபரப்புடன், ''எனது நாட்டைப் பகைவர்கள் சூழ்ந்திருக்கிறார்கள்! நான் பதைப் பதைப்புடன் அமைதி இல்லாமல் இருக்கிறேன். உடனே இப்போதே நான் போர்முனைக்குச் சென்றாக வேண்டும்'' என்று சொன்னான். அந்த வீரனின் குரலிலே படப்படப்பு வெகுவாகத் தொனித்தது.

ரிஷி வெகு சாந்தமாக அரசனிடம் சொன்னார்: ''மகனே! நீ திரும்பவும் குழப்பத்தை உண்டுபண்ணிக் கொள்கிறாய். 'நீ யார்?' என்று நான் உன்னைக் கேட்டபோது முதலில் 'நான் அரசனாக இருக்கிறேன்' என்று சொன்னாய். பிறகு 'நான் பசியாக இருக்கிறேன்' என்று தெரிவித்தாய். இப்போதோ பதைப்பதைப்புடன் அமைதி இல்லாமல் இருப்பதாகச் சொல்லுகிறாய். உண்மையில் நீ யார்? சொல்''.

அதற்கு அரசன் ரிஷியிடம், ''மகராஜ்! நான் இப்போது உங்களுக்குப் பதில் சொல்லும் மன

நிலையில் இல்லை. உடனே நான் இப்போது போருக்குச் சென்றாக வேண்டும்'' என்று படபடத்தான்.

ரிஷி விட்டுவிடுபவராக இல்லை. அவர் அரசனிடம், ''குழந்தாய், நீ இப்போது மிகவும் களைத்துப் போயிருக்கிறாய். உனது உடலில் இப்போது சண்டை போடுவதற்கு வேண்டிய சக்தி கூட இல்லை. முதலில் உனது பசியைப் போக்கிக்கொண்டு சிறிது ஓய்வு எடுத்துக் கொள். பிறகு நீ புறப்பட்டுப் போகலாம். உனது படைத்தளபதிகளைப் படைகளை நடத்திச்சென்று சண்டையைத் துவக்கச் சொல். நீ சற்று நேரம் கழித்துப் பின்னால் சென்று போரில் கலந்துகொள்ளலாம்'' என்று தெரிவித்தார்.

ரிஷி கூறிய அறிவுரை மாதவச்செல்வனின் அறிவுக்குப் பொருத்தமாகப் பட்டது. ஆகவே அவன் தன்னைத் தேடிவந்த வீரனிடம், ''படைத் தளபதிகளை முதலில் சண்டையைத் துவக்கச்சொல். நான் இடையிலே வந்து போரில் கலந்துகொள்கிறேன்'' என்று சொல்லி அனுப்பினான்.

அரசன் ரிஷியிடம், ''நான் தற்சமயம் மனப் பதைப்பதைப்பு நீங்கி அமைதியாக இருக்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டே சாப்பிடுவதற்கு உட்கார்ந்தான்.

அரசன் உணவை வாயருகே கொண்டு போகும்போது, ரிஷி அவனுடைய கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, ''குழந்தாய், நீ எனது கேள்விக்கு இன்னமும் பதில் சொல்லவில்லையே? என் கேள்விக்குப் பதிலைச் சொல்லிவிட்டுப் பிறகு சாப்பிடு. நான் உன்னிடம் நீ யார் என்று கேட்டபோது, முதலில் நான் அரசனாக இருக்கிறேன் என்று சொன்னாய். பின்பு நான் பசியாக இருக்கிறேன் என்றாய். இப்போது நீ, நான் மனப் பதைப் பதைப்பு நீங்கி அமைதியாக இருக்கிறேன் என்கிறாய். உண்மையில் நீ யார் என்று சொல்'' என்று விடாப்பிடியாகக் கேட்டார்.

அரசன், ரிஷியிடம் தான் சாப்பிட்டு முடித்த பிறகு அவருடைய கேள்விக்குப் பதில் சொல்வதாகக் கூறினான். திருப்தியாக நன்றாகச் சாப்பிட்டான்.

மிகவும் களைத்திருந்த அரசன், நன்றாக உண்டதன் விளைவாக சிறிது நேரம் தூங்கி ஓய்வு எடுத்துச்செல்ல முடிவு செய்தான். ஆகவே அவன் ரிஷியிடம், தான் சிறிது நேரம் தூங்கி எழுந்தபின் கேள்விக்குப் பதில் கூறுவதாகச் சொல்லிவிட்டு அங்கு இருந்த ஒரு மரத்தின் நிழலிலே படுத்து உறங்கினான்.

உடல் மிகவும் சோர்ந்து போயிருந்ததால், அரசன் நீண்ட நேரம் அயர்ந்து உறங்கிவிட்டான். உறக்கம் கலைந்து எழுந்த அரசன், தான் நீண்ட நேரம் உறங்கி விட்டதை அறிந்தான். உடனே அங்கிருந்து அவன் கிளம்பிச் செல்ல முடிவு செய்தான்.

தியானத்தில் அமர்ந்திருந்த ரிஷியிடம் சொல்லிக்கொள்ளாமல் அரசன் புறப்பட நினைத்தான். ரிஷி தியானம் கலைந்து சுய நிலைக்கு வந்தால், அவர் மீண்டும் கேள்வி கேட்க ஆரம்பித்துவிடுவார் என்று நினைத்த அரசன், தனது குதிரை இருந்த இடத்தை நோக்கி மெல்ல நகர ஆரம்பித்தான்.

மாதவச்செல்வனின் நடவடிக்கைகளை எல்லாம் ரிஷி கவனித்துக் கொண்டிருந்தார். அவர், அரசன் குதிரையின் அருகே சென்று புறப்பட இருந்த சமயத்திலே, ''குழந்தாய்! என்னிடம் சொல்லிக் கொள்ளாமலேயே புறப்பட்டுச் செல்லவா போகிறாய்?'' என்று அரசனிடம் வினவினார்.

தன்னுடைய திட்டம் தோல்வியடைந்ததை அறிந்த அரசன் ரிஷியிடம் திரும்பி வந்து, தனது குதிரை பயணத்திற்குத் தயாராக இருக்கிறதா? என்று பார்ப்பதற்குச் சென்றதாகக் கூறினான். மேலும், தான் நீண்ட நேரம் நன்றாக அயர்ந்து உறங்கி விட்டதாகவும் முனிவரிடம் தெரிவித்தான்.

ரிஷி அரசனிடம், ''குழந்தாய்! நீ நன்றாகத் தூங்கியதாக இப்போது சொல்கிறாய் அல்லவா? நீ நன்றாகத் தூங்கியது உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டார்.

அதற்கு அரசன், ''மகராஜ், நான் தூங்கியதே எனக்குத் தெரியவில்லை'' என்று பதில் சொன்னான்.

ரிஷி மாதவச்செல்வனிடம், ''குழந்தாய்! நீ தூங்கியதை நீயே அறியவில்லை என்று, அதாவது தூக்கத்தில் அறியாமையில் நீ இருந்ததாகக் குறிப்பிடுகிறாய்.

''மகனே, இது என்ன புதுக் குழப்பம்? நான் முதலில் உன்னிடம் நீ யார்? என்று கேட்ட போது, நான் அரசனுக இருக்கிறேன் என்ருய். பின்பு நான் பசியாக இருக்கிறேன், நான் பதைப்பதைப்புடன் இருக்கிறேன், நான் நிம்மதியாக இருக்கிறேன் என்றும் கூறினுய். இப்போது நான் அறியாமையில் இருக்கிறேன் என்கிருய்.

''இப்போது நீ கொஞ்சம் நன்ருக யோசித்து பதில் சொல். நீ கூறிய நான் அரசனுக இருக்கிறேன், நான் பசியாக இருக்கிறேன், நான் பதைப்பதைப்பாக இருக்கிறேன், நான் அமைதியாக இருக்கிறேன், நான் அறியாதவனுக இருக்கிறேன் என்று சொன்னவைகளில் உள்ள அந்த **'நான்'** என்பது உண்மையில் யார்?'' என்று கேட்டார்.

அரசனும் நன்குயோசித்துப் பார்த்து, 'ரிஷியின் கேள்விக்கு நான் கூறிய எல்லா பதில்களிலும் **நான்** என்ற ஒன்று அடிப்படையாகவும் எல்லாவற்றிலும் பொதுவாகவும், தனித்தும், நிலேத்தும் இருக்கிறது' என்று உணர ஆரம்பித்தான்.

தயாளுவான ரிஷி முடிவில் அரசனுக்கு ஆத்ம தத்துவத்தை உபதேசித்தார். அவனுடைய அறியாமையை நீக்கி அருள் புரிந்தார்.

அரசன், ஓர் உண்மையான நடைமுறை வேதாந்தியாகவும், ஜனகரைப் போல ராஜ ரிஷியாகவும் வாழ்ந்து ராஜ பரிபாலனம் செய்தான். 'தன்னுடைய முக்திக்காகவும் உலக நன்மைக்காகவும்'* என்னும் உயர்ந்த வேதாந்த இலட்சியத்துக்கு, மாதவச்செல்வனின் வாழ்க்கை ஒரு தலேசிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது.

---

*'ஆத்மனே மோக்ஷார்த்தம் ஜகத் ஹிதாய ச'
—சுவாமி விவேகானந்தர்

குருடனேக் காட்டிலும் குருடன் யார்?—ஆசையுள்ளவன்.

—ஆதி சங்கரர்

விஷத்துளி விழுந்ததும், தேனும் விஷமாகிவிடுவதைப் போல, கோபம் தர்மத்தைக் கெடுத்து விடுகிறது.

—இஸ்லாம்

சிறிய குளம் விரைவில் நிரம்பிவிடும்; சுண்டெலியின் வயிறும் சிறிது உணவில் நிரம்பிவிடும். அதைப்போலவே, சின்னப் புத்தியுள்ளவர்களும் அற்பத்தில் மகிழ்ந்து விடுகிருர்கள்.

—பஞ்ச தந்திரம்

மறைந்த பிறகும் மக்களின் மனதில் யார் அன்பால் நிறைந்திருக்கிருனே, அறிவில் உலாவுகிருனே அவனே புகழ் நிறைந்தவன். புகழ் பெற்ற மனிதர்களின் வாழ்க்கைதான் பிறகு சரித்திரமாக மாறுகிறது.

—ஓர் அறிஞர்

முக்குணங்களில் சத்துவமே கடவுளுக்கு மிக அருகில் உள்ளது. தெய்வீக மயமாவதற்கு உங்களிடத்தில் உள்ள சத்துவ குணத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். அதற்கு எல்லாவற்றிலும் சத்துவ குணம் உள்ளவைகளேத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

—பகவத்கீதை சுருக்கம்

குருவுக்கும் நமக்கும் இடையே உள்ள உறவு தெய்வீகமானது. நாம் உண்மையில் சச்சிதான ஸ்வரூபங்களே என்று எண்ணிக்கொண்டு குருவிடமிருந்து அந்த உணர்வைப் பெற முயல வேண்டும். பொறுமையுடனும் அடக்கத்துடனும் காத்திருந்து அவர் அருளேப் பெற வேண்டும்.

—ஒரு துறவி

தியானம்

சா. அருணாசலன்

இறைவனின் திருவருளைப் பெற தியானம் முற்றிலும் அவசியம். அலைந்து கொண்டிருக்கும் மனம் தியானத்திற்கு உதவாது.

இறையருளைப் பெறுவதற்குத் தியானம் செய்வது அவசியம். மனதை நம் வசமாக்கிக் கொண்டு, ஒருமை அடைந்து, தியானத்தில் சித்தியைப் பெறுவதற்குப் பல முறைகள் உண்டு. அந்தந்த முறைக்குத் தக்க பயன்களும் உண்டு.

ஐம்புலன்களையும் உயர்ந்த நிலையில் அமைத்துக் கெடாமல் நிறுத்தக் கூடியதும், இறையருளைப் பற்றிப் பலமுறை உடல் உருக, உள்ளம் உருக, நினைக்கச் செய்து, அதைப் பெறத் துணைபுரிவதுமாகிய நெறியைத் தியானம் என்று சொல்லலாம். தியானம் என்பது மனதை ஒருமுகப்படுத்தி, பரிசுத்தப்படுத்துவதற்குரிய ஓர் எளிய மார்க்கம்.

'உலகத்தைப் பற்றிய எண்ணங்களும், கவலைகளும், உன் மனதைச் சஞ்சலப்படுத்தும்படி செய்து கொள்ளாதே' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுகிறார். அதைப்போல, வாழ்க்கையில் நல்வினை தீவினைகளை எப்போதும் நினைத்துக்கொண்டு மனதைச் சஞ்சலப்படுத்திக் கொள்ளாமல், பழக்கத்தாலும் வைராக்கியத்தாலும் மனதை வசப்படுத்தி, உள்ளே அடங்கி, சுத்த ஆத்மாவுடன் இரண்டறக் கலக்கச் செய்ய வேண்டும்.

ஆடி ஆடிச் செல்லும் ஜட்கா வண்டியில் உட்கார்ந்து எழுதத் தொடங்கினால், எழுதுகோல் அங்குமிங்கும் அசைந்து எழுத்துகளைச் சரியாக எழுத முடியாமல் போகும். அதுபோல உலகப்பற்றை நினைத்து அலைந்து கொண்டிருக்கும் மனதைக்கொண்டு தியானம் செய்யத் தொடங்கினால், ஒருபோதும் சித்தி அடைய முடியாது.

மேலும் தியானத்திற்கு மௌனம் மிகவும் அவசியம். வாயும் மனமும் அடங்கித் தியானம் நிலைத்து நிற்கச் செய்வதற்கு மௌனம் ஒரு சாதனம் ஆகும். வீணாக ஒரு வார்த்தையும் கூடப் பேசாமல், மிக அவசியமான நேரங்களில் மட்டுமே பேசி, பேச்சைச் சுருக்க வேண்டும். மௌனமே மனதைப் பரிசுத்தமாக்கும். மன அடக்கமும் மௌனமும் ஒன்றோடொன்று கூடவே செல்ல வேண்டும்.

இறைவனுக்கும் மனிதனுக்கும், நடுவில் இருப்பது மனம். மனம் வேறுபட்டுத் திரிந்து நின்றால், மனிதன் இயல்பாகவே தீய குணங்களில் ஈடுபட்டுத் துன்பப்படுகிறான். கடலை எடுத்துக்கொள்வோம். அலை அலையாக எழுந்து கொந்தளிக்கிறது. பிறகு, ஒரு சமயம் இயல்பான நிலையைப் பெறுகிறது. அலை எழுவதும் விழுவதும் இயற்கையே. ஆழ்கடலோ அமைதியாக இருக்கிறது. அதுபோல் குணவிகார அலைகள் மனிதனைச் சுற்றி எழுவதும், விழுவதும் இயற்கையே. ஆழ்கடலைப் போல, மனம் உண்மையான ஆத்ம சொரூபத்தில் அழுந்தி அமைதியுடன் இருக்க வேண்டும். அமைதி புலன்களை ஒருமுகப்படுத்தும். அமைதி ஆத்ம சுகம் தரும், அறிவைத் தெளிவாக்கும்; மனதை உள்ளே ஒடுங்கச் செய்து, தெய்வத்துடன் ஒன்றுபடுத்தும்.

தியானம் சிறந்ததாக விளங்க, புலனடக்கம் முற்றிலும் அவசியம். புலன்களை அடக்கி, எண்ணங்களைத் தூய வழிகளில் செலுத்தி, மனதை இதயக் கோவிலில் உள்ள தெய்வத்துடன் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும்.

இளமைப் பருவத்தில், புலன்கள் காமம் போன்ற பொருந்தாத உலக விவகாரங்களை உள்ளே கொண்டு வந்து மனதைக் கெடுக்கும். அவைகளைத் தீய வழிகளில் செல்லாமல் உடற் பயிற்சி, யோகப் பயிற்சி, தியானப் பயிற்சி முதலிய பயிற்சிகளால் மெல்ல அடக்கி இழுத்து, தன்னுள் விளங்கும் தெய்வப் பொருளை அடையும் வழியில் ஈடுபடுத்தி இறையருளைப் பெற முயற்சிக்க வேண்டும்.

''கடவுளைக் காண விரும்புவாயானால் அதற்கேற்ற சாதனங்களைக் கைப்பற்று. பகவானே! பகவானே! என்று சொல்வதால் மட்டுமே என்ன பயன் ஏற்படும்?'' என்று ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் கூறுகிறார். உதட்டளவில் கடவுளின் திருநாமங்களைச் சொல்வதால் மட்டும் இறைவனின் திருவருளைப் பெற முடியாது. உடல், உயிர், உள்ளம், உணர்வு, அறிவு, நினைப்பு, செயல், முயற்சி முதலிய அனைத்தும் இறைவனைப் பற்றியதாகவே இருக்க வேண்டும்.

ரோக நிவாரண அஷ்டகம்

பின்வரும் பாடலைச் செவ்வாய்க் கிழமை காலையிலும் மாலையிலும், அஷ்டமி தினத்திலும் படித்தால் நற் பலன்களை அடையலாம். நோயாளிகளின் ரோக நிவாரணத்திற்காக மற்றவர்கள் அவர்கள் அருகில் இருந்தும் படிக்கலாம். தேவியின் சந்நிதியிலோ, திருவிளக்கின் முன்போ படிக்கலாம்.

1

பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க் கையளே
ஜெகமது யாவும் ஜெயஜெய வெனவே
சங்கரி யுன்னைப் பாடி டுமே
ஹநஹந தகதக பசபச வெனவே
தளிர்த் திடுஜோதி யான வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

2

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க் கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈச் வரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவி மணித் தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

3

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க் கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான் விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா.

4

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க் கையளே
ஊரணி மாயே ஊற்று தாயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசி னியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

5

திருமக ளானாய் கலைமக ளானாய்
மலைமக ளானாய் துர்க் கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி வானாய் பெண் மையளே
நறுமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கை யளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

6

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க் கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாய கியே
நாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாய வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா.

7

கோவுர ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க் கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சி யளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணையே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா.

8

ஜெயஜெய சைல புத்திரி ப்ரஹ்ம
சாரணி சந்த்ர கண்டி னியே
ஜெயஜெய கூஷ் மாண்டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்ய யளே
ஜெயஜெய கால ராத்திரி கௌரி
ஸித்திதா ஸ்ரீதவ துர்க் கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா.

உதவியவர்:

இந்து சமய மன்றங்கள்
திருநெல்வேலி மையம்.

31, பெருமாள் சன்னதித் தெரு,
திருநெல்வேலி—1.


கஜேந்திர மோட்சம்

பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா

'அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும்' என்று பெரியவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதை நாம் மறவாமல் நினைவில் வைத்துக் கொள்வோமானால், தீமைகளைச் செய்ய மாட்டோம்; ஆணவம் குறையும். தீமைகள் செய்வதை பலவீனத்தின் காரணமாக நம்மால் அறவே தவிர்க்க முடியாமல் போனாலும் கூட, நாம் செய்யும் தீமைகள் குறையவாவது செய்யும் என்பது நிச்சயம்.

நன்மை அல்லது தீமை பயக்கும் காரியத்தை இப்போது செய்கிறோம். அதன் விளைவு உடனடியாகவோ, சற்று காலம் தாழ்ந்தோ, இந்தப் பிறவியிலோ இனி வரும் பிறவிகளிலோ நம்மை வந்து அணுகும் என்பது உண்மை. நன்மையைச் செய்தவன் நன்மையை அனுபவித்தே ஆக வேண்டும். தீமையைச் செய்தவன் தீமையை அனுபவித்தே ஆக வேண்டும். இது இயற்கையின் தவிர்க்க முடியாத ஒரு நியதியாக இருக்கிறது.

புராணங்களும் இந்த உண்மையைத் தமக்குரிய எளிய முறையில், பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் சொல்கின்றன.



பல புராணக் கதைகளிலே தீவினை செய்தவர்களை, அதன் பயனாகத் தீவினைகள் எப்படியெல்லாம் துரத்தி வந்து அல்லல்படுத்தி இருக்கின்றன என்று பார்க்கலாம். அதேபோலவே நல்வினை செய்தவர்களை, அதன் பயனாகிய நல்வாழ்க்கை கைகூப்பித் தேடி வந்தடைந்திருப்பதையும் பார்க்கலாம். இத்தகைய கதைகளை ஓர் எச்சரிக்கையாக எடுத்துக் கொண்டு அறவாழ்க்கை வாழ்ந்தால், அதனால் நன்மையே விளையும். இப்படிப்பட்ட நன்மைகள் விளைய வேண்டும் என்பதுதான் புராணங்களின் உள்நோக்கம் எனலாம்.

'மனிதன் செத்துப் போகும்போது, அவன் தலையிலே ஒன்றையுமே கட்டிக்கொண்டு போகப் போவதில்லை'—என்று சொல்கிறோம். ஸ்தூலமாக அவன் எதையுமே எடுத்துச் செல்வதில்லை என்பது உண்மைதான். காதறுந்த ஊசியும் கடைவழிக்கு வாராதுதான். ஆனால் அவன் சூட்சுமமாகத் தன்னோடு எடுத்துச் செல்பவைகளாகச் சில இருக்கவே செய்கின்றன. நமது பெரியவர்கள் 'எடுத்துச் செல்பவைகள்' என்று கூட அவைகளைச் சொல்வதில்லை. அவனைப் 'பற்றிச் செல்பவைகள்' என்று அவைகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எடுத்துச் சென்றால், நாம் விரும்பும்போது அவைகளைக் கீழே போடவோ மீண்டும் எடுத்துக் கொள்ளவோ முடியும். 'பற்றி இருப்பவைகளை' அப்படி நாம் செய்ய முடியாது. வேண்டாம் என்று நினைத்தாலும் உடனடியாக உதறிவிட முடியாது. 'பற்றித் தொடர்வன புண்ணிய பாவங்களே' என்பது அழகிய, ஆனால் அதே சமயத்தில் ஆழ்ந்த ஓர் உண்மை ஆகும்.

அறிந்தோ அறியாமலோ, இப்போதோ எப்போதோ, இந்தப் பிறவியிலோ எந்தப் பிறவியிலோ தீவினை செய்து—அதன் பலனை இப்போது ஒருவர் அனுபவித்து வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்படிப்பட்டவரும் கூட கடவுளிடம் கொள்ளும் உத்தம நம்பிக்கையால் மேன்மை பெற முடியும். ஒருவர் பாவக் குழியின் அதள பாதாளத்திற்கே சென்றுவிட்டவரைப் போல தீய வாழ்க்கை வாழ்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்படிப்பட்டவரும் கூட, இந்த நிமிடம் முதல் மத வாழ்க்கையை உண்மையாகவே கடைப்பிடிப்பாரானால், மேலான நிலையை நிச்சயம் அடைய முடியும். ஏனென்றால், அத்தகைய ஒரு தனிப்பெருமை மனிதப் பிறவிக்கு இருந்து கொண்டிருக்கிறது.

'மனிதன் படும் எல்லாத் துன்பங்களுக்கும் ஒரே ஒரு காரணம், அவன் உண்மையாகவே கடவுளை நம்பி சார்ந்து, வாழாததுதான்' என்று சொல்கிறார் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்.

ஸ்ரீமத் பாகவதத்திலே ஒரு கதை 'கஜேந்திர மோட்சம்' என்று வருகிறது. இந்தக் கதையின் மூலம் 'ஒரு ஜீவன் எந்தப் பிறவியில் இருந்தாலும், ஆண்டவனிடம் உத்தம நம்பிக்கையைக் கொண்டிருந்தால் துன்பங்கள் தீரும்; பெரிய நன்மை வரும்' என்ற நீதி உணர்த்தப்படுகிறது.

கதையிலே ஒரு யானை வருகிறது. 'யானைக்கே நல்லகதி கிடைத்தது. மனிதன் முயற்சி செய்தால் நல்லகதி கிடைக்காதா?' என்று நம்மைச் சிந்திக்க வைக்கிறது இந்தக் கதை.

* * * *

கந்தர்வ லோகத்திலே இன்ப நுகர்ச்சிக்கான போகப் பொருள்கள் மிகமிக ஏராளமாகக் கிடைக்கும். அங்கு வாழ்ந்த கந்தர்வர்களில் ஹூஹூ என்பவன் ஒருவன்.

'இளமைப் பருவம் (யுவாவஸ்தை), செல்வம், அதிகாரம், விவேகம் இல்லாமை—இவை ஒவ்வொன்றும் தனித்தனியாகக் கஷ்டத்தை உண்டுபண்ணும்; நாலும் சேர்ந்தால் என்ன?' என்று சம்ஸ்கிருதத்திலே ஒரு சுலோகம் சொல்வார்கள்.

ஹூஹூ இளமைப் பருவத்தினன். அதோடு இளமைக்கே உரிய துடுக்கு நிறைந்தவன். ஒரு நாள் அவன் தன்னுடைய மனைவிமார்களுடன் ஒரு தடாகத்திலே நீராடிக் கொண்டிருந்தான். அப்போது, தேவலர் என்னும் மாமுனிவர் தற்செயலாக அதே தடாகத்திற்கு நீராட வந்தார்.

அவர், ஞானேந்திரியங்கள் ஐந்தையும் மனதுடன் அசையாது நிறுத்தி, புத்தியைத் தொழிலற்றுப் போகச் செய்திருந்தார். மிகுந்த தபோபலம் நிரம்பப் பெற்றவர் அவர்.

அத்தகைய பெருமைக்கு உரியவர் பொய்கையில் இறங்கிய சமயம், கந்தர்வன் கொஞ்சம்கூட சிந்தித்துப் பார்க்காமல் முனிவருடைய காலைத் தண்ணீருக்குள் பற்றி இழுத்தான்! அடக்கம் அமரருள் உய்க்கும் என்பதை கந்தர்வன் மறந்து விட்டான்.

குணமென்னும் குன்றேறி நின்றவர் முனிவர். எப்போதும் இனிமை தரும் நல்ல மொழிகளையே பேசிப் பழக்கப்பட்டவர் அவர். ஆனால் கந்தர்வனின் செய்கை அவரையே சிறிது கோபத்துக்கு ஆளாக்கியது. 'அளவான உணவு உடலுக்கு நன்மையைத் தரும். அதைப்போல நாவடக்கம் ஆன்மாவிற்கு நன்மையைத் தரும்' என்பதைத் தபோதனர் ஒரே ஒரு நிமிஷம் மறந்து விட்டார். கந்தர்வனுக்கு ஒரு சாபம் கொடுத்தார்! சாபத்தின் காரணமாக, திரிகூட மலையிலுள்ள ருத்மத் என்னும் உத்தியான வனத்தில் கந்தர்வன் ஒரு முதலையாகப் பிறந்து வாழ்ந்து வந்தான்.



''மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று, ஆனை கட்டிப் போரடிக்கும் அழகான தென் மதுரை'' என்று அன்றைய மதுரை மாநகரைத் தமிழ்ப் புலவர் ஒருவர் சிறப்பித்துப் பாடியிருக்கிறார். அத்தகைய மதுரை மாநகரைத் தலைநகராகக் கொண்டு இந்திரத்யும்னன் என்னும் மாவீரன் ஒருவன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான். அவன் மிகச் சிறந்த ஒரு விஷ்ணு பக்தனாக விளங்கினான்.

இந்திரத்யும்னன், மலய பர்வதத்திற்கு அருகிலே சாதனம் பழகுவதற்கு ஏற்ற வகையில் ஓர் ஆசிரமம் அமைத்துக் கொண்டான். தவ வாழ்க்கையில் ஈடுபட்டு வந்தான். நாளாக நாளாக அவனுடைய விஷ்ணு பக்தி ஓங்கி வளர்ந்தது. மௌன விரதத்தையும் அவன் அனுஷ்டிக்க ஆரம்பித்தான்.

ஒரு நாள் வழக்கம் போல இந்திரத்யும்னன் தன்னை மறந்து விஷ்ணு பூஜையில் ஈடுபட்டிருந்

தான். அப்போது அகஸ்திய முனிவர் சிடர்கள் புடைசூழ மலய பர்வதத்திற்கு வருகை தந்தார்.

மகான்களை வாழ்க்கையில் தரிசிக்க நேருவது மிகமிக அபூர்வம். அவர்களைத் தரிசிக்கும் வாய்ப்பு கிடைக்கும்போது, அவர்களை வரவேற்பதற்காகவும் உபசரிப்பதற்காகவும், வழக்கமாக சாதகன் ஒருவன் அனுஷ்டிக்கும் மௌனம் போன்ற சமய சாதனைகளையும் அப்போதைக்குச் சற்று ஒத்தி வைக்கலாம். அதில் தவறு இல்லை.

ஆனால், இந்திரத்யும்னன் மௌன விரதத்தை அனுஷ்டித்து வந்தபோது முனிவர் வந்ததால், அவரோடு அவன் பேச்சுக் கொடுக்கவில்லை.

அகஸ்திய முனிவர், 'இந்திரத்யும்னன் தன்னை அவமதிப்பதற்காகத்தான் பேசாமல் தனியாக உட்கார்ந்துகொண்டிருக்கிறான்' என்று அவனுடைய மௌன விரதத்தைப் பற்றித் தவறாக நினைத்து விட்டார்! அதோடு, ''இவன் சாது அல்ல, மதி கெட்டவன், புத்தி திருந்தாதவன், வேதியர்களை அவமதிப்பவன் போலும்; யானையைப் போல ஜடமான புத்தி உள்ளவனாகத் தோன்றுகிறான். ஆகையால் யானை போன்ற தமோ குணமுடைய இவன், யானையாகவே பிறக்கக்கடவது'' என்று ஒரு சாபத்தையும் கொடுத்தார்.

இப்படி ஒரு சாபத்தை இந்திரத்யும்னன் பெற வேண்டும் என்பது அவனுடைய பழவினை போலும்! இல்லாவிட்டால் பரம பக்தனாகிய அவன், அகஸ்திய முனிவரைப் பார்த்தும் அவரை உபசரிக்காமல் இத்தகைய ஒரு சாபத்திற்கு ஆளானதுதான் எப்படி?

எப்படியோ, முனிவரின் வாக்குப் பலிக்கவே செய்தது. இந்திரத்யும்னன் திரிகூட மலையிலேயே யானையாகப் பிறந்தான்.

பழம் பிறவியில் மக்களுக்கு மன்னனாக இருந்த இந்திரத்யும்னன், இந்தப் பிறவியில் யானைகளுக்கு மன்னனாகப் பிறந்தான். வனத்தில் இருந்த செடி கொடிகள், மூங்கில் புதர்கள் ஆகியவைகளுக்கிடையே கஜேந்திரன் ஓடியாடித் திரிந்தான். அவனது அட்டகாசம் திரிகூட மலையையே நடுங்க வைத்தது.

ஒரு சமயம் கஜேந்திரனுக்கு நீர் வேட்கை மிகுந்தது. பருத்த காதுகள் அசைய, மலை உருண்டு வருவதைப் போல பெண் யானைகள் புடைசூழ அவன் தடாகத்தை நோக்கிச் சென்றான். வேட்கை தீர நீரைப் பருகினான். கஜேந்திரனின் களைப்புத் தீர்ந்தது. களிப்பு மிகுந்தது. ஆகவே அவன் சுற்றியிருந்த பெண் யானைகளின் மேல் நீரை வாரி வாரி வீச ஆரம்பித்தான்.

ஆனால் அந்தக் களிப்பு நீண்ட நேரத்திற்கு நீடிக்கவில்லை. முதலையாகப் பிறந்திருந்த கந்தர்வன், கஜேந்திரனின் காலை நீருக்குள் பிடித்து இழுத்தான். கஜேந்திரனின் களிப்பு எல்லாம் ஓடோடிப் பறந்து விட்டது. கவலை மிகுந்தது. தன்னாலான மட்டும் காலை விடுவித்துக்கொள்ள முயற்சி செய்தான். முடியவில்லை. கஜேந்திரனின் துன்பத்தைப் பெண் யானைகளால் தாங்க முடியவில்லை. அவனைக் கரையேற்றுவதற்காக அவைகள் உதவி செய்ய முயற்சி செய்தன. எவ்வளவோ முயற்சி செய்தும் அவைகளின் முயற்சி பயன்படவில்லை. பெண் யானைகள் கதறின.

உற்றார்கள் கதறுகிறார்களே என்பதற்காக யமன் நம்மை விட்டுவிட்டா செல்கிறான்? விதி, கஜேந்திரனைத் தனது வழியே பிடித்து இழுக்க ஆரம்பித்துவிட்டது.

கஜேந்திரனின் வலிமை, முதலையின் உடும்புப் பிடியால் சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித்தது. முதலைக்குத் தண்ணீரிலே பலம் என்பார்களே, அதை நிரூபிப்பதைப் போல முதலையின் பிடி மேலும் மேலும் இறுகியது.

இந்திரத்யும்னன் யானையாகப் பிறந்திருந்தாலும், சிறந்த விஷ்ணு பக்தனானதால் பழம் பிறப்பை அவன் நன்றாக நினைவில் வைத்திருந்தான். ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வி ஏழு பிறவிகளுக்கு அவனைத் தொடர்ந்து வரும் என்று சொல்வார்கள். அது உண்மைதான் என்பதைப் போல, முன்பிறவியில் அவன் விஷ்ணுவைத் துதித்து வந்த ஸ்தோத்திரம் ஒன்று தற்செயலாக கஜேந்திரனின் ஞாபகத்துக்கு வந்தது. அந்த ஸ்தோத்திரத்தால் அவன் விஷ்ணுவைப் போற்றித் துதிக்க ஆரம்பித்தான்:

''எல்லாவற்றையும் ஆள்பவனாகவும், கால சர்ப்பத்திலிருந்து தப்ப முயற்சிப்பவர்களுக்கு அருள்பாலிப்பவனாகவும் உள்ளவனை நான் சரண் புகுகிறேன். யாரிடம் யமனும் பயந்து

ஓடுகிறுனே, யார் இந்த உலகை ஊடுருவி நிற்கிறுனே, அந்த ஆதிபரம்பொருளுக்கு நமஸ்காரங்கள். யார் இகத்திற்கும் பரத்திற்கும் அப்பாற்பட்டவனே, யார் காரிய காரணங் களுக்கு அப்பாற்பட்டவனே, தானுகவே தோன்றியவனே அவனைச் சரண் புகுகிறேன்.

''தேவர்களும் ரிஷிகளும்கூட அறிய முடியாதவனும், இந்த உலகமாகிய பெரிய நாடகத்தைத் திறமையாக நடத்திக் கொண்டிருப்பவனுமாகிய பரமாத்மாவை நான் சரண் புகுகிறேன். பிறப்பற்றவனும், மாயையைத் தரித்தவனுமாகிய புருஷோத்தமன் என்னைக் காப்பாற்றி அருள்வானுக. வாக்குக்கும் மனதுக்கும் உணர்வுக்கும் எட்டாத பெருமானை, உருவமும் அருவமுமான அண்ணலை நான் சரண் புகுகிறேன்.

''எவன் அளவில்லாத சக்தியுடைய பரமேசுவரனே, பரப்பிரம்மமோ அவனுக்கு நமஸ்காரம். வடிவம் இல்லாதவனும், பல வடிவங்களை உடையவனும், ஆச்சரியமான செயலுடையவனுமான அவனுக்கு நமஸ்காரம். தன்னைத் தன்னுலே விளக்குபவனும், எல்லாவற்றிற்கும் சாட்சியும், பரமாத்வுமாகிய அவனுக்கு நமஸ்காரம்.

''முக்குண மயமானவனும், அதையும் கடந்தவனும், பொய்மையே மிகுந்த இந்த உலகில் ஒரே ஒரு மெய்ப்பொருளும், ஆகமங்களும் வேதங்களும் ஆனவனும், அறிவிலிகளையும் தனது அற்புதக் கடைக்கண் காட்சத்தால் ரட்சிப்பவனுமாகிய ஜீவ ரட்சகன் என்னைக் காப்பானுக.

''தேவன், அசுரன், மானிடன், ஆண், பெண், அலி, ஊர்வன, நடப்பன, பறப்பன, நீந்துவன என்று சொல்ல முடியாதவனும், குணத்துக்கும் கர்மத்துக்கும் அப்பாலானவனும், உளதிற்கும் இலதிற்கும் அப்பாலானவனும், அங்கிங்கெனுதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவனுமாகிய பரவஸ்து என்னைக் காப்பாற்றி அருள்வதாகுக.

''உலகை ஆக்கியவரும், உலகே ஆகியவரும், எனினும் உலகல்லாதவரும், உலகத்தையே உடைமையாய்க் கொண்டவரும், உலகின் ஆத்மாவும், பிறப்பற்ற பிரம்மமும் பரமபதமுமாகி விளங்கும் அவனை வணங்குகிறேன். யோகத்தால் கருமங்கள் ஒடுங்கப்பெற்ற யோகிகள் யோகபாவனை கூடிய இதயத்தில் எவனைப் பார்க்கிறுர்களோ, அந்த யோகேசுவரனை நான் நமஸ்கரிக்கிறேன்.

''நான் உயிர் வாழ விரும்பவில்லை. உள்ளும் புறமும் அவிவேகத்தால் சூழப்பெற்ற இந்த யானைப் பிறவியால் ஆவதென்ன? ஆன்ம உலகின் திரை நீங்குவதாகிய மோட்சத்தையே விரும்புகிறேன். அதற்குக் காலத்தால் அழிவு இல்லை. காலம் தேசம் இடம் ஆகிய குறுகிய எல்லைகளை எல்லாம் கடந்த மோட்சத்தை, இறைவா! கருணை கூர்ந்து எனக்குத் தந்தருள்வாயாக!''

கஜேந்திரனின் பிரார்த்தனைக்குக் கருணுகரக் கடவுள், சங்கு சக்கர கதாதாரி கருணைக் கூர்ந்தார்; வேதங்களின் வடிவமாகிய கருட வாகனத்தில் ஏறித் தடாகத்தை நோக்கி விரைந்து வந்தார்.

மலர் மாலை மார்பில் துவள வந்த மகாவிஷ்ணுவை கஜேந்திரன் கண்டான். தன்னுனுடைய எல்லாத் துன்பங்களும் அப்போதே தீர்ந்து விட்டதாக உணர்ந்தான். தடாகத்திலிருந்த அன்றலர்ந்த ஒரு பெரிய தாமரைப் பூவை எடுத்து, தலைக்கு மேலே தூக்கிப் பிடித்து, ''ஆதிமூலமே! அகில குருவே! நாராயணு! உனக்கு என்னுடைய நமஸ்காரங்கள்'' என்று சொல்லிக் கூவினுன்.

ஸ்ரீமந் நாராயணர் யானையையும் முதலையையும் தரையிலே தூக்கிப் போட்டார். அதே சமயத்தில் பகவானின் சக்கராயுதம் முதலையைப் பிளந்து கஜேந்திரனை விடுவித்தது. முதலையாக இருந்த ஹூஹூ, சாபம் நீங்கித் தன்னுடைய பழைய வடிவைப் பெற்றுன். பிறகு அவன் பகவானை வலம் வந்து போற்றித் துதித்துவிட்டு, தனது கந்தர்வலோகம் திரும்பினுன்.

எம்பெருமானின் திருக்கரத்தால் தீண்டப்பட்ட கஜேந்திரனின் அஞ்ஞானத் தளை அகன்றது. அவன் யானை வடிவு நீங்கி, மஞ்சள் பட்டாடையுடனும் நான்கு புஜங்களுடனும் பகவானைப் போலவே வடிவம் பெற்றவனுக விளங்கினுன்.

அப்போது பிரம்மா, ஈசுவரன் ஆகியோரின் தலைமையில் தேவர்களும் ரிஷிகளும் கந்தர்வர்களும் கூடி, ஸ்ரீமந் நாராயணனின் மீது மலர்மாரி பொழிந்து மகிழ்ந்தார்கள்.

இறைவனை அடையும் திரு

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்

இறைவனை மனத்தில் எண்ணுவது எளிய காரியம் என்று கூறிய அம்மையாரை நாம் ஒன்று கேட்கிறோம். ''அவனை நினைந்து வாழ்வது எளிது என்றால் அந்த எளிய காரியத்தை எல்லாரும் செய்யலாமே! மனம் உடையார் யாவருமே அந்த நிலையை அடையலாமே! ஆனால் உலகத்தில் அந்த எளிய காரியத்தைச் செய்பவர்கள் மிகக் குறைவாகத்தானே இருக்கிறார்கள்? அதிலிருந்து அவனை நினைப்பது எளிதன்று என்று சொல்லத் தோன்றுகிறதே! இந்த முரண்பாட்டைத் தீர்த்தருள வேண்டும்'' என்று விண்ணபித்துக் கொள்கிறோம்.

''என்போல்வார் சிந்தையினும் இங்குற்றான்; காண்பார்க்கெளிது'' என்று ஒரு பாட்டிலும்,



''எம்மானை உள்நினைந்த சிந்தையராய் வாழும் திறம், எளியதிதுவன்றே'' என்று அடுத்த பாட்டிலும் சொன்னவர் காரைக்காலம்மையார். அப்படி வற்புறுத்திச் சொல்வதைக் கேட்டு நமக்கு ஐயம் எழுகிறது. ''அத்தகைய சிந்தை, உலகில் பெரும்பாலோருக்கு இல்லாதது ஏன்?'' என்று கேட்கத் தோன்றுகிறது.

அம்மையார் அந்த முரண்பாட்டைத் தீர்க்க முற்படுகிறார். அவருடைய நெஞ்சே அவருக்கு இந்தக் கேள்வியைப் போடுகிறது. ''நீங்கள் சொல்வது போல அவனை எளிதிலே பெற்று விட முடியுமா? நினைத்தால் வந்து விடுவானா?'' என்று கேட்கிறது.

அம்மையார் தம் நெஞ்சைப் பார்த்துச் சொல்கிறார். அது நம்முடைய ஐயத்தைப் போக்கப் பயன்படுகிறது. நாம் உண்மையை உணராத மடமையை உடையவர்களாக, பேதையர்களாக இருக்கிறோம். அதனால் இந்த ஐயம் எழுகிறது. நம்மைப் பார்த்து, ''மடம் உடையவர்களே, பேதையர்களே!'' என்று விளிக்கலாம். அது பண்பாடு ஆகாது. ஆகவே, தம்முடைய நெஞ்சைப் பார்த்தே, ''மட நெஞ்சே!'' என்றும் ''பேதாய்!'' என்றும் விளித்துச் சொல்கிறார்.

இறைவன் அருள் வடிவமாக இருக்கிறவன், அவனுடைய அருளே அம்பிகை. உலகத்தில் உள்ள உயிர்கள் தன்னை வணங்கித் தியானித்து அருள்பெற வேண்டும் என்ற திருவுள்ளம் கொண்டு அருவாய் விளங்கும் அவன் உருவம் கொண்டு வருகிறான். முதலில் மாதிருக்கும் பாதியனாக எழுந்தருளுகிறான்; சத்தனும் சத்தியும் இணைந்த அர்த்தநாரீசுவரனாகத் தோன்றுகிறான். அவனுடைய திருவடியை அடைந்து உய்ய வேண்டும். அந்தத் திருவடியை அடையும் வாழ்வைவிடச் சிறந்த வாழ்வு வேறு இல்லை. அந்தச் செல்வத்துக்கு இணையான செல்வம் ஏதும் இல்லை. அந்தச் செல்வத்தை, வளவாழ்வை, நாம் அடைய வேண்டும்.

அழகிய நிறம் பொருந்திய கண்ணையுடையவள் அம்பிகை. அந்தச் கண்களுக்கு மாவடுவின் பிளப்பை உவமை சொல்வது வழக்கம். அவளைத் தன் பாகத்திலே கொண்டிருக்கிறான் எம்பெருமான். பெண் பாதியும் ஆண் பாதியுமாக இருக்கும் அவனுக்கு இரண்டு திருவடிகள். அவற்றை வணங்க வேண்டும்; சிந்திக்க வேண்டும்; இடைவிடாமல் தியானிக்க வேண்டும்; அடைய வேண்டும். அதுவே பெரிய திரு; ஐசுவரியம்.

நிறத்த
இருவடிக்கண் ஏழைக்கு ஒருபாகம் ஈந்தான்
திருவடிக்கண் சேரும் திரு

[நிறத்த - தமக்குரிய அழகிய நிறத்தை உடைய. இருவடி கண்- இரண்டு மாவடுவின் பிளவைப் போன்ற திருவிழிகளை உடைய. ஏழைக்கு-பெண்ணுக்கு.]

இத்தகைய செல்வம் நம்மைத் தேடிக் கொண்டு, நாம் இருக்கும் இடத்தை வந்து அடையும் என்று, அம்மையார் முன்பு சொன்ன

வற்றைக் கேட்டபோது தோன்றுகிறது. இறைவனைச் சிந்திக்கும் பேறு தானே வந்து அடையும் என்றெண்ணி நாம் மனம் போன போக்கெல்லாம் போய்க் கொண்டிருந்தால் அந்தத் திரு கிடைக்காது.

உலகத்தில் செல்வத்தைத் தேடிப் போய்ப் பெறுகிறார்கள். ''திரை கடல் ஓடியும் திரவியம் தேடு'' என்று சொல்வார்கள். முயற்சி இல்லாதவர்களுக்குச் செல்வம் கிடைக்காது. ''முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை, இன்மை புகுத்தி விடும்'' என்று **திருக்குறள்** சொல்கிறது. இந்தத் திருவை ஆக்குதற்கே முயற்சி வேண்டுமென்றால் இறைவனை அடையும் திரு எளிதில் கிடைக்குமா?

அந்தத் திரு எல்லாவற்றிலும் பெரிய திரு. உலகிலுள்ள செல்வத்துக்குக் கேடு உண்டு; ஆக்கம் உண்டு; வரவுண்டு, செலவுண்டு. லாபம் உண்டு, நஷ்டமுண்டு. ஆனால் இறைவன் திருவடிக்கட் சேரும் திருவுக்கு இவை இல்லை.

''சேரும் ஆக்கமும் கெட்ட திருவினர்'' என்று **பெரிய புராணம்** சொல்கிறது. மோட்சமும் வேண்டாம் என்று செம்மாந்திருக்கும் திரு அது.

''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்;
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்;
கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்''

என்று அந்தத் திருவையுடையவர்களின் வீரத்தைப் பற்றிச் சேக்கிழார் பேசுவார்.

நாம் எதை எதையோ விரும்பி, எதை எதையோ செய்துகொண்டும், எதை எதையோ நாடி ஓடிக்கொண்டும் இருந்தால், அந்தத் திரு தானே வந்து நம்மை அடையாது. நம் நெஞ்சை எங்கெங்கோ போகவிட்டுக் கொண்டிருந்தால் அந்தத் திரு நமக்குக் கிடைக்காது.

அதை நாடிச் செல்ல வேண்டும். அதற்கென்று ஒரு தகுதி, திறம், உண்டு. அழுக்கு மூட்டையைச் சுமத்தின வண்டியிலே அழகு மலரை ஏற்ற முடியாது; உலகப்பற்றுக்களிலே உழலும் நெஞ்சில் இறைவன் திருவடி பதியாது.

ஊரவர்பால் பற்றும் உறவினர்பால் பாசமும் உடைமைகளின்பால் பிணைப்பும் உடைய பெண் ஒருத்தி தன் இல்லத்தில் வளைய வருகிறாள். அறுபது நாழிகையும் அவர்களோடு பழகிப் பொழுது கழிக்கிறாள். அவளுக்கு இன்னும் பருவம் வரவில்லை. ஆதலால் மற்றப் பெண்களோடு விளையாடுகிறாள். விளையாட்டுப் பொம்மைகளைச் சேர்த்து வைக்கிறாள்; பாதுகாக்கிறாள்.

அவள் பருவம் அடைகிறாள். மணப் பருவம் வந்துவிட்டது. அவளுக்கு ஏற்ற மணாளன் அவளைத் தேடி வரவில்லை. அவள் இருக்கும் சூழ்நிலை அழுக்கு நிரம்பியது. அவள் ஒரு கட்டழகனைப் பற்றிக் கேள்வியுறுகிறாள். மிகவும் அழகுடையவன், ஆற்றலுடையவன், சிறந்த தலைமையுடையவன், கருணையுடையவன் என்று தெரிந்துகொள்கிறாள். அவனை அடைய வேண்டும் என்ற ஆசை முகிழ்க்கிறது. அவன் இருக்கும் நிலை எங்கே? இவள் இருக்கும் நிலை எங்கே? மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை போல அவர்களிடையே வேற்றுமை இருக்கிறது.

அவள் தாய் தந்தையர் தங்கள் உறவுப் பையன் ஒருவனுக்கு மணம் முடிக்க எண்ணுகிறார்கள். வறுமையில் வாடி நலியும் அந்தச் சூழ்நிலையில் அந்தப் பையன் எப்படியிருப்பான்? அழுக்குடையும் அவலட்சணத் திருமேனியும் சோம்பேறித்தனமும் உள்ள அவனை மணக்க அவளுக்குத் தோன்றுமா? அந்தச் சூழ்நிலையில் அவனைப் போன்றவர்களே கிடைப்பார்கள்.

அவள் யாரைக் காதலிக்கிறாளோ அவன் அவளை நோக்கி வரமுடியாது. இந்த அழுக்கு நிலத்தில் அவன் எப்படி அடி எடுத்து வைப்பான்?

அவளுக்கோ காதல் முறுகுகிறது. எப்படியாவது அவனை அடைந்து விடுவது என்று துணிந்துவிட்டாள். அதற்குமுன் துணிய வேண்டியது ஒன்று உண்டு. தான் வளரும் சூழ்நிலையைத் துறக்க வேண்டும். தன் உறவினர்களைப் பிரிந்து ஓட வேண்டும். தன் தாய் தந்தையர்பால் உள்ள பாசத்தை அறுத்தெறிந்து அவர்களையும் உதறிவிட்டுச் செல்ல வேண்டும்.

அதற்குரிய துணிவு, திறம், தகுதி அவளுக்கு உண்டாக வேண்டும். இல்லையானால் எவ்வளவு தான் இருந்த இடத்திலிருந்தபடியே மறுகினாலும் அவள் ஏங்கி நிற்கிற வாழ்வு கிடைக்காது. தண்ணீருக்குள் இருந்து கொண்டு

அங்கே தீயை மூட்ட முடியுமா? சாக்கடைக்குள் அழுந்தியபடியே அழுக்குப் படாத ஆடையை அணிய முடியுமா?

ஆகவே இந்த இடத்தைவிட்டு ஓட வேண்டும். அவன் வருவதற்கேற்ற சூழ்நிலை இங்கே இல்லை. அவன் உள்ள இடத்துக்குச் சென்றுதான் அவனை அடைய வேண்டும்.

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்;
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்;
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்;
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்.
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்;
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தை;
தன்னை மறந்தாள்;தன் நாமம் கெட்டாள்;
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!''

என்ற திருத்தாண்டகத்தில் இறைவனிடம் காதல்கொண்ட நங்கையைப் பாடுகிறார் அப்பர். பாட்டில் முற்பாதி அவளுடைய காதல் வளர்ச்சியைச் சொல்கிறது. இறைவனுடைய நாமத்தையும் வண்ணத்தையும் கேட்கிறாள்; அவன் இருக்கும் இடம் ஆரூர் என்பதை உணர்கிறாள். அந்த ஊர் நெடுந்தூரத்தில் இருக்கிறது என்பதை உணர்ந்ததும் அவனையடைய வேண்டும் என்ற பித்துப் பிடிக்கிறது. அப்படிப் பித்தியாகும் வரையில் ஒரு நிலை; அவள் உணர்ச்சி வளரும் நிலை, அந்த அளவில் நின்றால் தலைவன் தாளை அடையும் இன்பம், அவன் திருவடிக்கண் சேரும் திரு, எய்துமா?

அதற்குமேல் அவள் செயல்படுகிறாள். தன்னைப் பற்றிக் கொண்டிருக்கும் பற்றுக்களினின்றும் நீங்கி இறைவனை நாடி வருகிறாள். அன்னையையும் அத்தனையும் நீத்து ஆரூரண்ணலை நாடி வருகிறாள். ஒரு பெண் ஆடவனைத் தேடி வலியச் செல்வது பிழையல்லவா? இது உலகியலுக்கு அடுக்குமா! அவள் இவற்றை யெல்லாம் பார்க்கவில்லை, உலகத்தார் ஆசாரத்தை உதறி எறிகிறாள்.

தன்னையே மறந்து தன் பெயர் கெட்டுப் போகத் தலைவன்தாளைத் தலைப்படுகிறாள்; அவன் திருவடிக்கண் சேர்ந்து விடுகிறாள்.

அவளைப் போல, எல்லாவற்றையும் உதறி எறிந்துவிட்டு வேறு எதையும் நினைக்காமல் 'ஏழைக்கு ஒருபாகம் ஈந்தா'னுடைய திருவடியையே எண்ணிச் சென்று அடைய வேண்டும். அப்போதுதான் அந்த இன்பத் திரு கிடைக்கும். இப்படி அடைய ஒரு திறம் வேண்டும்; ஒரு துணிவு வேண்டும், துணிவு பிறந்துவிட்டால் சென்று அடைவது எளிதாகும்.

அந்தத் திரு நம்மை வந்து அடையட்டும் என்று சும்மா இருந்தால் கிடைக்காது. நாமே சென்று அடைய வேண்டும். 'தான் தேடாப் பொன்னுக்கு மாற்றும் இல்லை, உரையும் இல்லை' என்பார்கள். இவ்வாறு முயன்று சென்று அடைந்தால்தான் அந்தத் திருவை அடையலாம்; அதனால் இன்பம் பெறலாம்.

'ஏ மட நெஞ்சமே, பேதையே, நீ சென்று அடைவது அல்லாமல், அதுவாக உன்னைத் தேடி வரும் என்று எண்ணாதே; இருந்த இடத்திலே இருந்தபடியே பெறத்தான் உன்னால் முடியுமா? நீ பெறும் நிலையை உடையை ஆவாயோ?' என்று கேட்கிறார் அம்மையார்.

திறத்தால் மடநெஞ்சே! சென்றுஅடைவ தல்லால்
பெறத்தானும் ஆதியோ? பேதாய்!

நெஞ்சு சென்று அடைவதாவது, மற்ற எண்ணங்களை யெல்லாம் விட்டொழித்து, உயர்ந்த நிலைக்கு ஏறி, இறைவனையன்றி வேறு எதையும் பற்றாத யோக நிலையைப் பெற்று நிற்றல்.

நெஞ்சத்தால் நினைப்பது என்பது எளிதானாலும், அந்த நெஞ்சம் பல பிறவிகளில் ஏற்றிக்கொண்ட பற்றையும் வாசனையையும் விட்டொழிப்பது மிகவும் அரிது. அதை இடைவிடாத பயிற்சியினால் பெறவேண்டும். ''இக்கரை கடந்திடில் அக்கரையே! இனிப்பது சிதம்பரச் சக்கரையே!'' என்று இராமலிங்க சுவாமிகள் அழகாகப் பாடியிருக்கிறார். அக்கரை சென்றால் இனிக்கும் சர்க்கரையைப் பெறலாம். அது எளிது. இக்கரை கடப்பது அரிது. முன்பாட்டுக்களில் சிந்தைக்கு ஆண்டவன் வசமாவான் என்ற எளிமையைச் சொன்னார். இந்தப் பாட்டில் சிந்தை, நின்ற நிலையை நீத்துப் பற்றொழிந்து நிற்பதன் அருமையைச் சொன்னார். அந்த அரிய தகுதி அல்லது திறம் வந்துவிட்டால் 'உள்நினைந்த சிந்தையராய் வாழ்வது' எளிதாகிவிடும்.

திறத்தால் மடநெஞ்சே! சென்றுஅடைவது அல்லால்,
பெறத்தானும் ஆதியோ, பேதாய்?— நிறத்த
இருவடிக்கண் ஏழைக்கு ஒருபாகம் ஈந்தான்
திருவடிக்கண் சேரும் திரு.

[இயல்பாகவே மடமையையுடைய நெஞ்சே! சொன்னாலும் புரிந்து கொள்ளாத பேதமையையுடைய மனமே! நல்ல வண்ணமுடைய இரண்டு மாவடுவின் பிளப்பைப் போன்ற திருவிழிகளை உடைய பெண்ணாகிய அம்பிகைக்கு தன் ஒரு பாகமாகிய இடப்பாகத்தை வழங்கினவனாகிய இறைவனுடைய திருவடியைச் சேர்ந்து இன்புறும் வளவாழ்வு, அதற்குரிய தகுதியோடு, அதனைப் பெறவேண்டும் என்ற ஏக்கத்தோடு, எல்லாவற்றையும் விட்டொழித்து, அதனையே நாடிச் சென்று அடைவதல்லாமல், இருந்த இடத்தில் இருந்தபடியே பெறுவதற்கு நீ தகுதியுடையை ஆவாயோ?

திறம்-வன்மை; தகுதி. மடமை இயல்பாக அமைந்த அறிவின்மையையும், பேதமை சொல்லியும் தெரிந்து கொள்ளாத அறிவின்மையையும் குறித்தன. பெறவும்-இருந்த இடத்தில் இருந்தபடியே பெறுவதற்கும். தான்; அசை, ஆதியோ-ஆவாயோ; அதற்குரிய இயல்புடையை ஆவாயோ? நிறம்-அழகிய வண்ணம்; இதை மாவடுவுக்கும் அடையாக்கலாம்; கண்ணுக்கும் அடையாக்கலாம். வடி-மாவடுவின் பிளப்பு. ஏழையென்பது வறியவள், அறிவிலி என்பவற்றைக் குறிக்காமல் பெண் என்பதைக் குறித்தது.

திரு, பெறவும் ஆதியோ என்று கூட்டுக.]

பலகால் முயன்று விட்டொழித்த மனம் இறைவனுடைய தரிசனத்தைப் பெறும் என்பது கருத்து.

இது அற்புதத் திருவந்தாதியில் 47-ஆவது பாட்டு.


இதயத்தில் சமயப்பற்று இல்லாமல் மூளையை மட்டும் விருத்தி செய்து கொள்வது நாகரீகமான அநாகரீகம்; மூடி மறைத்த மிருகத்தனம். **—பன்ஸன்**

சோம்பலும் சோர்வும் கொண்டு நூறு ஆண்டுகள் வாழ்வதைவிட, ஒரு நாளேனும் பெருமுயற்சியோடு வாழ்ந்திருத்தல் மேலானது. **—புத்தர்**

இறைவனின் திருவருள் உனது சரணாகதியின் தன்மையைப் பொறுத்திருக்கிறது. பூரண சரணாகதி இருந்தால் பரிபூரண அருள் கிடைக்கும். ஆசை அறவே நீங்கிவிட்டால் மனிதன் தெய்வ சொருபமாகிறான். **—ஒரு துறவி**

நீங்கள் உங்கள் ஆன்மாவின் சக்தியை உணர வேண்டுமானால், இரவு சுமார் மூன்று மணி அளவில் எழுந்திருந்து உங்கள் நினைவை நெற்றி நடு மையத்தில் வைத்து ஒரு மணி நேரம் நிலைத்திருக்க வேண்டும். அதனால் உங்கள் அறிவு புறத்தில் போகாது. **—அகஸ்தியர் ஞானம்**

''என்னைப் பார், நானும் உன்னைப் போல மனைவியை இழந்தும், ராஜ்ஜியத்திலிருந்து துரத்தப்பட்டும் அவமானப்பட்டு வருகிறேன். ஆயினும் துக்கத்தின் வேகத்தை அடக்கிக் கொண்டு தைரியத்தைக் காத்து வருகிறேன். நான் ஒரு வானரன்; என்னால் தைரியமாக இருக்க முடியுமானால் உனக்கு இது ஒரு கஷ்டமா? சோகத்துக்கு இரையானால் ஒரு காரியமும் சாதிக்க முடியாது'' இவ்வாறு சுக்ரீவன் ராமனிடம் சொன்னான். **—சக்கரவர்த்தித் திருமகன்**





மக்கள் தொண்டே மகேசன் தொண்டு

சுவாமி விவேகானந்தர்

1

ஒரு காரியத்தின் பயனில் கருத்தைச் செலுத்துமளவிற்கு, அந்தக் காரியத்தைச் செய்யும் முறையிலும் கருத்தைச் செலுத்த வேண்டும்—இது என்னுடைய வாழ்க்கையில் நான் கற்றுக்கொண்ட மிகப்பெரிய பாடங் களுள் ஒன்ருகும்......இந்த ஒரு பாடத்தி லிருந்து பல பெரிய பாடங்களே நான் எப் போதும் கற்றுக்கொண்டு வந்திருக்கிறேன். குறிக்கோளுக்குச் செலுத்தும் கவனத்தை, அதை அடைய மேற்கொள்ளும் பாதைக்கும் செலுத்த வேண்டும் என்பதில், வெற்றிக்குரிய எல்லா இரகசியமும் அடங்கியிருப்பதாக எனக் குத் தோன்றுகிறது.

2

நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவி புரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும்தான்.

நாம் ஏன் உலகிற்கு நன்மை செய்ய வேண் டும்? மேலோட்டமாகப் பார்த்தால் உலகிற்கு நன்மை செய்வதாகத் தோன்றும். ஆனுல் உல கிற்கு நன்மை செய்வதால், உண்மையில் நமக்கு நாமேதான் உதவி செய்து கொள் கிருேம்.

உயர்ந்த பீடத்தில் நின்று உனது கையில் ஐந்து காசுகளே எடுத்துக்கொண்டு, ''ஏ! பிச்சைக்காரா, இதை வாங்கிக் கொள்'' என்று நீ சொல்லாதே. மாருக அவனுக்குக் கொடுப்ப தால் உனக்கு நீயே உதவி புரிந்துகொள்ள முடிந்ததை நினைத்து, அந்த ஏழை அங்கிருந்த தற்காக அவனிடம் நீ நன்றியுள்ளவனுக இரு. கொடுப்பவன்தான் பாக்கியசாலியே தவிர பெறுபவன் அல்ல. இந்த உலகில் உன்னுடைய தர்ம சிந்தனையையும் இரக்க மனப்பான்மை யையும் பயன்படுத்த ஒரு வாய்ப்புக் கிடைத் திருப்பதற்காக நன்றியுள்ளவனுக இரு. இதன் மூலம் தூய்மையும் பரிபூரணத்தன்மையும் உன்னே வந்தடையும்.

3

சமநிலையிலிருந்து பிறழாதவன், சாந்தமான வன், நன்மையை ஆராய்ந்து ஏற்பவன், அமைதி படைத்தவன், இரக்கமும் அன்பும் பெரிதும் உள்ளவன்—இத்தகையவன் நல்ல பணிகளில் ஈடுபடுகிருன். அதன்மூலம் அவன் தனக்கே நன்மையைத் தேடிக் கொள்கிருன்.

4

ஒரு பெரிய காரியத்தைச் செய்து முடிப் பதற்கு நீண்டகால இடையருத முயற்சி பெரி தும் தேவைப்படுகிறது. இத்தகைய முயற்சியில் ஒரு சிலர் தோல்வியுற்ருலும் அதைக்குறித்து நாம் கவலைப்பட வேண்டியதில்லை. இவ்விதம் பலர் வீழ்ச்சியுறுவதும், துன்பங்கள் நேரு வதும், பெருமளவில் கஷ்டங்கள் உண்டாவதும் இயல்பே ஆகும். மனிதன் தனது சுயநலத்தை யும் மற்றுமுள்ள எல்லாப் பேய்களேயும் ஆன் மீக ஞானம் என்னும் நெருப்பைக் கொண்டு தன்னிடமிருந்து விரட்ட முயற்சி செய்யும் போது, அவை அந்த முயற்சியை எதிர்த்துப் போராடுகின்றன.

5

தீமையைச் செய்வதால் நாம் நமக்கும் மற்ற வர்களுக்கும் தீமை செய்கிருேம். நன்மையைச் செய்வதால் நாம் நமக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்து கொள்கிருேம்.

கர்ம யோகத்தின் விதியின்படி, ஒருவன் செய்த ஒரு கர்மத்தை, அது தனக்குரிய பலனே விளைவித்து முடிக்கும் வரையிலும் அழிக்க முடி யாது. கர்மம் தனக்குரிய பலனே விளைவிப்பதை இயற்கையிலுள்ள எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. நான் ஒரு தீய செயலேச்

செய்தால், அதற்குரிய துன்பத்தை நான் அனுபவித்தே ஆக வேண்டும். இப்பிரபஞ்சத்திலுள்ள எந்த சக்தியாலும் இதைத் தடுக்கவும் முடியாது, நிறுத்தி வைக்கவும் முடியாது. அதே போல நான் ஒரு நல்ல காரியத்தைச் செய்தால், அது தனக்குரிய நல்ல பலனை விளைவிப்பதைக் பிரபஞ்சத்திலுள்ள எந்த சக்தியாலும் தடுக்க முடியாது.

6

'நான்' அல்லேன், 'நீயே' என்னும் இந்த மனப்பான்மைதான், எல்லா நன்மைகளுக்கும் எல்லாச் சிறந்த ஒழுக்கங்களுக்கும் அடிப்படையாக விளங்குகிறது.

இருப்பது சொர்க்கமா, நரகமா என்று யார் இங்கு கவலைப்படுகிறார்கள்? ஆத்மா என்ற ஒன்று இருக்கிறதா? இல்லையா? என்று யார் கவலைப்படுகிறார்கள்? மாறாத ஒன்று இருக்கிறதா? இல்லையா? என்று யார் கவலைப்படுகிறார்கள்? இதோ, இங்குள்ள உலகில் துன்பம் நிறைந்திருக்கிறது. புத்தர் பெருமான் செய்ததைப் போல, இந்தத் துன்பத்தைக் குறைப்பதற்கு முயற்சி செய். அல்லது அந்த முயற்சியிலேயே உயிரை விட்டுவிடு.

நீ கடவுள் நம்பிக்கை உடையவனாக இருந்தாலும் சரி, அல்லது நாத்திகனாக இருந்தாலும் சரி; ஆக்ஞேயவாதியாக (Agnostic) இருந்தாலும் சரி, அல்லது வேதாந்தியாக இருந்தாலும் சரி; கிறிஸ்தவனாக இருந்தாலும் சரி, அல்லது இஸ்லாமியனாக இருந்தாலும் சரி, உன்னுடைய சுக துக்கங்களை மறந்து நீ வேலை செய். இதுதான் நீ இப்போது கற்றுக்கொள்ள வேண்டிய முதல் பாடமாகும்.

7

''கடவுளைக் குறித்த உங்களுடைய பலவிதமான கருத்துக்களைப் பொருட்படுத்த நான் தயாராக இல்லை. ஆத்மாவைக் குறித்த நுட்பமான பலவித சித்தாந்தங்களை எல்லாம் விவாதித்துக் கொண்டிருப்பதால் என்ன நன்மை ஏற்படப் போகிறது? நன்மையைச் செய்யுங்கள்; அதோடு நல்லவராகவும் இருங்கள். இது உங்களை முக்திக்கு அழைத்துச் செல்லும்'' என்று தீர்க்கதரிசிகளிலேயே புத்தர் ஒருவர் மட்டும்தான் கூறினார்.

எந்தவிதமான சுயநல நோக்கமும் இல்லாமல், பணம், புகழ் மற்றும் வேறு எதிலும் கவனம் செலுத்தாமல், நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே தொண்டு செய்பவன் தான் சிறப்பாகப் பணி ஆற்றுகிறான். இத்தகைய மன நிலையில் ஒருவன் பணியாற்ற வல்லவனாகும்போது, அவன் ஒரு புத்த பகவான் ஆகிவிடுவான். உலகத்தையே மாற்றி அமைக்கக்கூடிய வகையில் வேலை செய்யும் சக்தி அத்தகையவனிடமிருந்து வெளிப்படுகிறது.

8

நம்மைப் பற்றியே முதலில் நினைத்துக் கொள்ளும் சுயநலம்தான் மிகப் பெரிய பாவமாகும்.

'நான்தான் முதலில் சாப்பிடுவேன், நான் தான் மற்றவர்களைவிட அதிக செல்வம் பெற்றவனாக இருப்பேன், எல்லாவற்றையும் நான் தான் வைத்திருக்க வேண்டும்' என்றும், 'மற்றவர்களுக்கு முன்பு நான்தான் சொர்க்கம் போவேன், மற்றவர்களுக்குக் கிடைப்பதற்கு முன்பு நான் முக்தியை அடைவேன்' என்றும் நினைப்பவன்தான் சுயநலவாதி ஆவான்.

'நான்தான் கடைசி ஆளாக இருப்பேன். சொர்க்கத்திற்குப் போவதைப் பற்றியும் நான் பொருட்படுத்தவில்லை. நரகத்திற்குச் செல்வதன் மூலமாக என்னுடைய சகோதரர்களுக்கு என்னால் உதவி செய்ய முடியுமானால், நரகத்திற்குச் செல்லவும் நான் தயாராக இருக்கிறேன்' என்றும் சுயநலம் இல்லாதவன் சொல்கிறான்.

இத்தகைய தன்னலமற்ற மனப்பான்மை தான் ஆன்மீக வாழ்க்கை இருப்பதற்கும் இல்லாதிருப்பதற்கும் உரிய சோதனையாகும். இவ்வித சுயநலமற்ற தன்மையைப் பெருமளவில் பெற்றிருப்பவன், பெருமளவிற்கு ஆன்மீக வாழ்க்கையைப் பெற்றவனாகிறான். அவனே மற்றவர்களைக் காட்டிலும் சிவபெருமானுக்கு அருகில் இருக்கிறான்.

9

உன்னால் ஒருவருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாக உன்னால் சேவைதான் செய்ய முடியும். கடவுளின் குழந்தைகளுக்குத் தொண்டு செய். உனக்கு அப்படித் தொண்டு செய்யும் பாக்கியம் இருந்தால், அவர்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் ஆண்டவனுக்கே நீ தொண்டு செய்தவனாகிறாய்.

தனது குழந்தைகளில் யாரேனும் ஒருவருக் காவது உதவி செய்யும் வாய்ப்பை ஆண்டவன் உனக்குக் கொடுத்தால், அதன்மூலம் நீ பாக் கியம் பெற்றவன் ஆகிறாய். ஆனால் அதன் காரணமாக உன்னைப் பற்றி நீ மிகவும் பெரு மையாக நினைத்துக் கொள்ளாதே. மற்றவர் களுக்குக் கிடைக்காத இந்த அரிய வாய்ப்பு உனக்குக் கிடைத்திருக்கிறது. இதனால் நீ பாக் கியசாலி ஆகிறாய். எனவே நீ செய்யும் இந்த சேவையைக் கடவுள் வழிபாடாகவே செய்.

10

ஆண்டவனுக்கு உதவுவதற்காக என்று இல் லாமல், அவருக்காகப் பணியாற்றும் பேறு பெற்ற நாம் பாக்கியசாலிகள் ஆவோம். 'உதவி' என்ற சொல்லை உனது உள்ளத்தி லிருந்தே விலக்கிவிடு. நீ உதவி செய்ய முடி யாது. அப்படி நீ நினைப்பதுதான் தெய்வ நிந்தனையாகும். அவருடைய விருப்பத்தினால் தான் நீ இங்கு இருக்கிறாய். நீ அவருக்கு உதவி செய்வதாகவா சொல்கிறாய்? இல்லை, உன்னால் அவரை வழிபடத்தான் முடியும். நீ ஒரு நாய்க்கு ஒரு பிடி சோறு கொடுக்கும்போது, அந்த நாயைக் கடவுளாகவே பாவித்து வழி படு. அந்த நாயினுள்ளே கடவுள் இருக்கிறார். அவரே எல்லாமுமாய் இருக்கிறார், எல்லாவற் றிலும் இருக்கிறார்.

11

கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண் டிருக்கிறார். இதைத் தவிர தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை—இந்த உண்மையை எவ் வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்து கொண்டிருக்கிறேன். மக்களுக்குச் சேவை செய் பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய் பவனாகிறான்.

12

உலகமாகிய இந்த நரகத்தில் ஒருவனால், ஒரே ஒரு நாளைக்காகிலும் ஒரே ஒருவனுடைய இதயத்திற்குச் சிறிது இன்பமும் மகிழ்ச்சியும் அளிக்க முடியுமானால், அந்த ஒன்றே ஒன்று மட்டும்தான் உண்மையாகும். இந்த உண் மையை வாழ்நாளெல்லாம் பட்ட கஷ்டங் களுக்குப் பிறகு நான் உணர்ந்து கொண்டேன். மற்றவைகள் எல்லாம் பொருளற்ற வெறும் பகல் கனவுகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

~~13~~

துன்பம் விளைவதற்கு அறியாமையைத் தவிர வேறு எதுவுமே காரணமில்லை. இந்தக் கருத் தைப் பட்டப்பகல் வெளிச்சத்தைப் போல நான் தெளிவாகப் பார்க்கிறேன். உலகிற்கு யார் ஒளிதரப் போகிறார்கள்? பண்டைக் காலத் தில் தியாகம்தான் வாழ்க்கைக்குரிய விதியாக இருந்தது. இனிவரப் போகும் பல கோடி நூற்றாண்டுகளுக்கும் இந்த விதி அப்படியே தான் இருக்கப் போகிறது. பலரின் நன்மைக் காக, அனைவரின் சுகத்திற்காக, உலகில் தைரிய மும் சிறப்பும் பெருமளவில் பெற்றிருப்பவர் கள் தங்களைத் தியாகம் செய்து கொண்டுதான் ஆகவேண்டும். என்றென்றும் நிலைத்த மாறாத அன்பும் கருணையும் பொருந்திய பல நூறு புத்தபிரான்கள் இப்போது தேவைப்படு கிறார்கள்.

14

தேவையில்லாத விஷயங்களைப் பற்றி அலட் டிக் கொள்வதில் நமது சக்தியைச் சிதற விடா மல், அமைதியுடனும் ஆண்மையுடனும் ஆக்க பூர்வமான பணிகளில் நாம் ஈடுபடுவோமாக. யார் ஒருவர் எதைப் பெறுவதற்குத் தகுதி உடையவராக இருக்கிறாரோ, அதை அவர் பெறாமல் தடுத்து நிறுத்துவதற்கு இந்தப் பிர பஞ்சத்திலுள்ள எந்த சக்தியாலும் முடியாது. இந்தக் கருத்தை நான் மனப்பூர்வமாக நம்பு கிறேன். கடந்த காலம் மிகவும் பெருமைக் குரியதாக இருந்தது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனால் எதிர்காலம் மேலும் சிறப்பாக அமையப் போகிறது என் பதை நான் முழுமனதுடன் நம்புகிறேன்.

15

மோகமாகிய முதலையின் வாயில், மக்கள் எப்படிப் பரிதாபமாகச் சிக்கிக் கொண்டிருக் கிறார்கள் என்பதைப் பார்! அந்தோ! இதயத் தைப் பிளக்கக்கூடிய அவர்களின் சோகக் குரலைக் கேளுங்கள். முன்னேறிச் செல்லுங்கள்! கட்டுண்டு கிடக்கும் மக்களைப் பந்த பாசங்களி லிருந்து விடுவிப்பதற்காகவும், எளியவர்களின் துன்பச் சுமையைக் குறைப்பதற்காகவும், அறி யாமையில் மூழ்கியிருக்கும் இருண்ட கிணறு கள் போன்ற உள்ளங்களை ஒளிபெறச் செய் வதற்காகவும், ஏ வீரர்களே! முன்னேறிச் செல் லுங்கள்! 'அஞ்சாதே! அஞ்சாதே!' என்று வேதாந்த முரசு முழங்கிக் கொண்டிருப்பதைக் கேளுங்கள்



ஆன்மீக உரையாடல்

சுவாமி துரியானந்தர்

தமிழாக்கம்: ரா. கணபதி

''ஞானியர் சிரத்தில் (ஒருமுகப்படுத்தி) தியானிக்கிறார்கள்; பக்தர்கள் இதயத்தில் தியானிக்கிறார்கள். பொதுவாக நாம் காண்பது இதுவே. ஆனால், இதயத்தில் தியானிப்பதன் விளைவாக ஆன்மீகப் பேருணர்வு விரியும்போது, அதன் பிறகு எந்தக் குறிப்பிட்ட ஸ்தானத்திலும் தியானத்தை ஒருமுகப்படுத்த வேண்டுவதில்லை.

''குருமகராஜுக்கு இரண்டு விதமான பாவங்கள் இருந்தன: சில சமயங்களில் தமக்கு திவ்ய ரூபங்கள் எதுவும் பிடிக்கவில்லை, காளியும் கூடப் பிடிக்கவில்லை என்பார். இந்த சமயங்களில் அவரது மனம் நிர்குணப் பரம்பொருளிலேயே அமிழ்ந்திருக்கும். மற்ற சமயங்களில், தம்மால் திவ்ய ரூபங்களின்றி நிறைவுற முடியவில்லை என்பார்; தெய்வீக அன்னையின் அரூப நிலையை உணரவோ, பிரம்ம ஞானம் பெறவோ தாம் விரும்பவில்லை என்று அவளிடமே கூறுவார்.

''அனைத்தையும் தள்ளி, அருவப் பரம்பொருளிலேயே தன்னை இழப்பவர் ஒருதலைப்பட்சமானவர்களே. ஞானி மறுபிறவியைக் குறித்து அஞ்சுகிறான்; மறுபிறவியில், தான் அஞ்ஞான வலைப்பட்டு விடுவோமோ என்பதால். ஆனால் [ஈச்வர நாடகத்தின்] நடிப்பு நிபுணன் எதைக் குறித்தும் அஞ்சுவதில்லை. இவ்வாறே ஆண்டவனின் [சகுண] ரூபங்களை மட்டுமே அனுபவித்து, அவனது அரூப [நிர்குண] ஏக நிலையை அனுபவியாதவனும் ஒருதலைப்பட்சமானவன்தான்.

''விச்வம் முழுதும் அழிந்த பிரளய காலங்களிலும் தெய்வீக வடிவங்கள் அழியாமல் இருப்பதாக புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பனிக்கட்டி உருகாத பிரதேசங்களும் உண்டு என்று குருமகராஜ் கூறுவார்.

''எவரிடமிருந்தும் எவ்விதப் பரிசையும் ஏற்காதீர்! பரிசுகள் உங்களுக்குத் தீமையே பயக்கும்; உங்கள் சுதந்திரத்தைப் பறிக்கும். எவன் எவருக்கும் எவ்விதக் கடப்பாடும் உணர்வதில்லையோ, எவனது மனம் [பரிசால்] பாதிக்கப்படுவதில்லையோ, எவன் அவற்றை சாட்சாத் இறைவனின் அன்பளிப்புகளாகவே உணர்கிறானோ, அவன்தான் [பரிசுகளை] ஏற்கலாம். உங்களுடைய சுதந்திரத்தில் குறுக்கிடாத, உங்கள் மீது மேலாதிக்கம் செய்ய விரும்பாத, நல்லவர்களின் அன்பளிப்புகளை மட்டுமே ஏற்றுக் கொள்ளலாம்.

''முன்னேற்றம் கண்ட சாதகனாக ஆனாலன்றி மனதின் சிக்கல்களை உள்ளபடி புரிந்து கொள்வது மிகவும் கடினம். மனம்தான் நம்மை எத்தனை வழிகளில் ஏமாற்றிக் கொண்டிருக்கிறது! யாரேனும் இந்த ஏமாற்றை நமக்குச் சுட்டிக் காட்டினாலும் கூட, நாம் அதற்குச் சமாதானங்கள் கற்பித்து விடுகிறோம். நமக்கு எத்தனைவிதமான சுய-அபிமானங்கள் உள்ளன என்பது நமக்கே தெரியவில்லை. புறத்தில் மட்டுமின்றி, அந்தரான்மாவாகிய வேறொருவருக்கு [கடவுளுக்கு] கட்டுப்படுவது தமாஷ் அல்ல.

"ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் பைபிள் படித்துக் கொண்டிருந்தார். அக்காலத்தில் அவர் புலால் உண்ணாதவராக இருந்தார். ஆனதால், இயேசு புலால் உண்டதாகப் படித்தபோது அது அவருக்கு பிடிக்கவில்லை. ஆனால் உடனேயே அவர், 'ஹா, நான் தாவர உணவு கொள்கிறேன் என்பதால் எத்தனை கர்வம் கொண்டுவிட்டேன்?' என்று நினைத்தார். நாம் நிறையப் படிக்கிறோம். ஆனாலும் அதில் அனுபவித்து, நம்முள் இருத்திக்கொண்டு, நம்மோடு கரைத்து ஜீரணித்துக் கொள்வது மிகச் சிறிதே. ஒரு சமயம் கிரீஷ் சந்திர கோஷிடம்

குருமகராஜ், 'பிரம்ம ஞானத்தைப் பற்றி நீ என்னப்பா பேசுகிறாய்? பிரம்மமாகிய சமுத்திரத்தை சுகதேவரே [சுகப் பிரம்மமே] வெறுமே பார்த்துத் தொட்டதோடு சரி. சிவனும்கூட அதில் மூன்று கையளவு குடித்த அம்மட்டில் சவமாகி விட்டார்' என்றார். இதைக் கேட்ட கிரீஷ் கோஷ் தம் தலையைப் பிடித்துக் கொண்டு, 'ஐயனே, போதும்! இதற்கு மேல் சொல்ல வேண்டாம். என் தலை சுற்றுகிறது' என்றார்.

''முற்காலத்தில் என் நரம்புகள் மிக நுட்பமாக இருந்தன. விஷயங்களை விளக்குவதில் நான் மிகவும் ஆற்றல் பெற்றிருந்தேன். எப்போது ஒருவர் என்னை ஒரு கேள்வி கேட்டாலும், அந்தக் கேள்வியினுடைய மூல ஆதாரத்திலிருந்து புற வெளிப்பாடு வரையிலும் உள்ள அனைத்தும் எனக்குத் தெரிந்துவிடும். எந்த நோக்கத்தோடு, ஏன் அவர் அந்த கேள்வியைப் போடுகிறார் என்பதையும் கண்டுகொண்டு விடுவேன். நான் [பதிலாகச்] சொல்லும் ஒவ்வொரு வார்த்தையிலும் ஓர் அறிவொளி வெள்ளம் பொதிந்திருக்கும்.

''முற்காலத்தில் நான் நவராத்ரியின்போது பூரண மவுனம் அனுஷ்டிப்பது வழக்கம். மனம் ஒருமுகப்பட்டு நிற்கும் ஒருவித போதையை உணர்ந்து வந்தேன். மனிதனாகப் பிறந்ததற்கு ஒருவன் என்ன செய்ய வேண்டுமோ அதை நான் செய்து விட்டேன். என் வாழ்க்கையைத் தூயதாக்கிக் கொள்வதே என்னுடைய லட்சியமாக இருந்தது. ஏராளமாகப் படிக்கும் வழக்கமும் அப்போது எனக்கு இருந்தது. தினமும் எட்டு அல்லது ஒன்பது மணிநேரம் படிப்பேன். பல புராணங்கள் படித்தேன். பிறகு வேதாந்தம் படித்தேன். முடிவாக வேதாந்தத்திலேயே என் மனம் பதிந்தது.

''குருமகராஜ் என்னிடம் வேடிக்கையாக, 'வேதாந்தத்தைப் பற்றி எனக்குக் கொஞ்சம் சொல்லேன். பிரம்மம்தான் ஸத்தியம், உலகம் பொய் என்றுதானே வேதாந்தம் சொல்கிறது? இல்லாவிடில், வேறு ஏதாவது சொல்கிறதா? அப்படியானால் பொய்யை விடு. மெய்யை எடுத்துக் கொள்' என்று சொன்னார். அது என் வாழ்க்கையிலேயே ஒரு பெரிய திருப்புமுனையாக ஆயிற்று''

வெற்றியிலும் தோல்வியிலும் இன்பத்திலும் துன்பத்திலும் நீ சமநிலையில் இருப்பாயானால், உண்மையான அமைதியும் ஆனந்தமும் உன்னிடம் நிலை பெற்று நிற்கும். உன் கடமையை நீ செய்தே ஆகவேண்டும். அதிலிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது.

—கீதை சுருக்கம்

பக்தி என்பது மன நெகிழ்ச்சி, மன உருக்கம். அன்பு என்பது ஆன்ம நெகிழ்ச்சி, ஆன்ம உருக்கம். எல்லா உயிர்களிடமும் கடவுள் வியாபித்து இருக்கிறார் என்பதை உணர்வதே ஈஸ்வர பக்தியாகும். தானாக நிற்றல் சத்துவ குணம். ஆன்மாவின் இயற்கை குணம் தயை.

—வள்ளலார்

சித்தும் ஜடமும் கூடிய விவகாரமே மனம். சித்து ரூபமான மனதுக்கு பிரம்மம் எட்டும், ஜட ரூபமான மனதுக்கு பிரம்மம் எட்டாது. அகமுகப்பட்ட மனதுக்கு பிரம்மம் அறியப்படும். பகிர் முக மனதுக்கு பிரம்மம் அறியப்படாது.

—கைவல்ய நவநீதம்

உங்களுடைய நாக்கு மற்றவர்களைப் புண்படுத்தக்கூடிய நிலையில் இருக்கும் வரை நீங்கள் இம்மி அளவும் ஆன்மீக முன்னேற்றம் அடையவில்லை என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். முதலில் உன்னை பரிசுத்தம் செய்துகொண்டால்தான் உலகத்தை நீ பரிசுத்தம் செய்ய முடியும்.

—ஒரு துறவி

ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தரின் 116–ஆவது ஜயந்தி விழா, 1978 ஜனவரி 31-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை வழக்கம்போல் விமரிசையாக சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் நடைபெறும்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை 600004

1978 ஜனவரி மாத நிகழ்ச்சிகள்

தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியார் ஜயந்தி விழா :

1-1-78 ஞாயிறு	ஜன்மதிதி: விசேஷ பூஜை, பஜனை, ஹோமம் முதலியன. (காலை 5 முதல் 12 மணி வரை)
2-1-78 முதல் 7-1-78 வரை	மாலை 5-30 முதல் 6-30 வரை திருப்பாவை—தொடர் சொற்பொழிவுகள் —திரு 'அண்ணு' சுப்பிரமண்யம்
8-1-78 ஞாயிறு	**பொது விழா :**
மாலை 4-30 முதல் 5-30 வரை	பக்திப்பாடல்கள் —தி. நகர், ஸ்ரீசாரதா வித்யாலயத்தின் ஆசிரியைகள்.
5-30 முதல் 7-30 வரை:	**பொதுக்கூட்டம்** தலைவர்: சுவாமி தபஸ்யானந்தர் பேசுவோர்: ஸ்ரீ A. K. குப்தா (ஆங்கிலம்) டாக்டர் N. M. கிருஷ்ணன் (தமிழ்)

ஸ்ரீமத் சுவாமி விவேகானந்த ஜயந்தி விழா:

31-1-78 செவ்வாய்:	ஜன்மதிதி: விசேஷ பூஜை, பஜனை, ஹோமம் முதலியன. (காலை 5 மணி முதல் 11-30 மணி வரை)
காலை 8 மணி	சென்னைக் கடற்கரையில் நிறுவப்பட்டுள்ள சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலைகள் அணிவித்தல்.
5-2-78 ஞாயிறு:	பொது விழா நிகழ்ச்சிகள்

இந்திய தத்துவஞானம் தொடர் சொற்பொழிவு:

	பூர்வ மீமாம்சை
22-1-78 ஞாயிறு	தலைவர்: சுவாமி தபஸ்யானந்தர்
மாலை 4-30 முதல் 6-30 வரை	பேசுவோர்: டாக்டர் என். வீழிநாதன் (தமிழ்) டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியம் (ஆங்கிலம்)
சத் சங்கம் : ஞாயிறுதோறும்	மாலை 4 மணி முதல் 8 மணி வரை
மாலை 4 முதல் 4-20 வரை	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் (15-1-78) ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் (29-1-78)
மாலை 4-20 முதல் 4-30 வரை	தியானம்
மாலை 4-30 முதல் 5-30 வரை	சொற்பொழிவு (தமிழ்) 1. **ஸ்ரீமத் ராமாயணம்**—டாக்டர் என். வீழிநாதன் (15-1-78) 2. **ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம்**—திரு வி. ஆர். கல்யாண சுந்தர சாஸ்திரிகள் (29-1-78)
மாலை 5-35 முதல் 6-30 வரை	சொற்பொழிவு (ஆங்கிலம்) **ஸ்ரீமத் பகவத்கீதை**—சுவாமி கபீரானந்தர் (29-1-78)
சிறப்புச் சொற்பொழிவுகள்: சனிக்கிழமைகளில் மாலை 5-45 மணிக்கு	1. **நாராயணீயம்**—திரு க. கோதண்டராமன் (14-1-78) 2. **பாகவதத்தில் ஆராய்ச்சி** —திரு பி. இராமகிருஷ்ணன் (21-1-78) 3. **ஈசாவாஸ்ய உபநிஷதம்**—சுவாமி கீர்த்திதானந்தர் (28-1-78)

வார நாட்களில் நடைபெறும் உரை நிகழ்ச்சிகள்—*(மாலை 5-30)*

வழக்கம் போல ஒவ்வொரு நாளும் நடைபெறும்

விசேஷ தினங்கள்:	அந்தர் யோகம் (சாதனை தினம்)—ஞாயிறு (15-1-78)
5-1-78 செவ்வாய்:	சுவாமி சிவானந்த ஜயந்தி
14-1-78 சனிக்கிழமை:	சுவாமி சாரதானந்த ஜயந்தி
23-1-78 திங்கள்:	சுவாமி துரியானந்த ஜயந்தி
	ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம்: ஏகாதசி தினங்களில் ஆரதிக்குப் பிறகு (5-1-78 & 19-1-78)

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தலைவர்,

தொலைபேசி: 71231

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

ஆண்டுச் சந்தா: இந்தியா—ரூ. 7.00 இலங்கை—ரூ. 18 யு.எஸ்.ஏ.—$ 3.00
பிறநாடுகள்—£ 1.70 ஆயுள் சந்தா: இந்தியா—ரூ. 100 யு.எஸ்.ஏ.—$ 50.00
பிறநாடுகள்—£ 20.00 தனிப்பிரதி வெளிநாடு: ரூ.—2

தனிப் பிரதி 70 காசு